# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, செப்டம்பர் 13 இதழ் - 79









**“தோட்டக்காட்டான்...”**

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கூட்டத்தில் பேசிய பேச்சு கடந்த வாரத்தில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது. பல தமிழர்கள்


பக்கம் - 03




**கிழக்கு அரசியலும் ஜனாதிபதி தேர்தலும்**


பக்கம் - 06




**ஐ. தே. க வின் வரலாற்றில் தமிழரின் வகிபாகம்**


பக்கம் -07




**பறைமேள வித்துவான் களுதாவளை க.பரசுராமன்**

பறைமேளக் கலையின் உயிரிருப்பின் காரணரான உயிர்வாழும்..


பக்கம் -11






# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் இழப்பீடு போதுமானதல்ல என்கிறார் சாலிய பீரிஸ்

--நி. அமிர்தஸன்--

போரின்போதும் அதன் பின்னரான சூழலிலும் இலங்கைப் படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பிறப்பு இறப்புப் பதிவாளர் திணைக்களத்தின் மூலமாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. அரசாங்கத்தின் ஆணைக்குழுக்கள் நடத்திய விசாரணைகளின்போது பதிவு செய்து, அரசாங்கம் வழங்கியுள்ள இல்லாமைச் சான்றிதழ் (Certificate of absence) பெற்ற உறவினர்களுக்கே முதலில் மாதம் ஆறாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சென்ற செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாதம் ஆறாயிரம் ரூபா போதுமானதல்ல என்று பொது அமைப்புகளும் மனித உரிமைச் சட்டத்தரணிகளும் கூறியதுடன் இடைக்கால நிவாரணமாக ஆறாயிரம் ரூபா வழங்கப்படுவதற்கு எதிர்ப்பும் வெளியிட்டிருந்தனர்.

அத்தோடு குறைந்தளவு இழப்பீடு வழங்கப்படுவதை மனித உரிமைச் செயற்பாட்டானர் ருக்கி பெர்ணாண்டோவும் விரும்பவில்லை.

மாதாந்தம் கூடுதலான தொகை வழங்கப்பட வேண்டுமென்று அவர் பரிந்துரை செய்திருந்தார்.

அதேவேளை, காணாமல் போவோர் பற்றிய அலுவலகத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் குறைந்தளவு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதை


தொடர்ச்சி பக்கம்..02


# முஸ்லிம் உயர்குடியின் போரா மாநாடு நிறைவு கட்டுநாயக்காவில் கடும் நெரிசல் பிக்குமார் விசனம்

## அரசுக்கு 39 மில்லியன் டொலர் வருமானம்



--நி.அமிர்தஸன் --

சர்வதேச போரா மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்புக்கு வந்த இஸ்லாமிய உயர்குடி வர்க்கத்தைச் சேர்ந்த போரா சமூகத்தினர் மீண்டும் இலங்கையில் இருந்து தமது நாடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றதால் அங்கு கடுமையான நெரிசல் ஏற்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாற்பது நாடுகளைச் சேர்ந்த சுமார் இருபத்தியோராயிரம் பேர் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பித்திருந்த போரா மாநாடு சென்ற திங்கட்கிழமை மாலை நிறைவடைந்திருந்தது.

அரபுநாடுகள் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளின் உயர் சமூகத்தைச் சேர்ந்த போரா சமூகத்தினர் வருடா வருடம் இந்த


தொடர்ச்சி பக்கம். 11


# வானிலை மையம் எச்சரிக்கை



வெள்ளியன்று நாட்டின் மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மற்றும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் 100 மில்லிமீற்றர் முதல் 150 மில்லிமீற்றர் வரை பலத் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


தொடர்ச்சி பக்கம். 05



## வீடு விற்பனைக்கு

**மட்டக்களப்பு கருவப்பங்கேணி ஜெயந்தி வீதியில், 15 பேச்சர்ஸ் உறுதிக்காணியில் அமைந்துள்ள தரமான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு :**

***077 0558611, 077 4680354***

## கடை வாடகைக்கு!

**மட்டக்களம்ப்பு, திருமலை வீதியில் இருந்து *50* மீற்றர் இடைவெளியில், *7 A* , செல்வநாயகம் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட *3* கடைகள் வாடகைக்கு உண்டு.**

***2000* சதுர அடி பரப்பைக் கொண்டவை.**

**மலசல, குளியல் அறை மற்றும் வாகன தரிப்பிட வசதி உடையவை.**

**களஞ்சிய அறை, காட்சிசாலை, காரியாலயம், சுப்பர் மார்க்கட் மற்றும் தேவைக்கேற்ப வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமானது. வாடகை பேசித்தீர்மானிக்கலாம்.**

**தொடர்பு : *076 3119970 / 077 851730***

## பியூச்சர் மைண்ட் (Future Mind) அமைப்பின் ஏற்பாட்டில் "துளிர்" மர நடுகை செயற்றிட்டம் முன்னெடுப்பு

மூன்று வருடமாக தொடர்ச்சியாக மர நடுகையை நடாத்தி சுற்றுச் சூழலில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தி இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் அக்கறையுடன் செயற்படும் பியூச்சர் மைண்ட் "Future Mind"அமைப்பினரால் துளிர் எனும் மர நடுகை செயற்றிட்டம் பல இடங்களில் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் 2019 ஆண்டிற்கான மர நடுகை செயற்றிட்டம் பல இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டும், 2016 ஆம் ஆண்டளவில் வைக்கப்பட்ட மரக்கன்றை பராமரித்தவர்களுக்கான கௌரவம் எனும் சான்றிதழும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

இங்கு கருத்து தெரிவித்த பியூச்சர் மைண்ட் (Future Mind) அமைப்பின் இயக்குநர் ம.ரஞ்ஜன்

இச் செயற்றிட்டமானது கடந்த வருடங்களை விட சற்று சிறப்பாக செய்ய வேண்டும் எனும் நோக்கிலும் இச் செயற்றிட்டம் எதிர்கால சந்ததியினருக்கு ஓர் நன்மையைத் தரக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் பல அனுசரணைகளான ஒட்டாறா பவுண்டேசன் (Otara Foundation ), HNB Assurance மற்றும் துரு ( Thuru ) அமைப்புடனும் இணைந்து பல்லாயிரக் கணக்கான மர நடுகை செயற்றிட்டத்தினை



முன்னெடுக்கின்றோம் என்றும்

இம் மாத இறுதியில் இச் செயற்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வாழைச்சேனையில் இரு இடங்களில் இயற்கையை நேசிக்கும் ஆர்வலர்களான துரு ( Thuru ) அமைப்புடன் இணைந்தும் மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்தும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன்,

மட்டக்களப்பு ,திருகோணமலை கல்முனை ஆகிய பிரதேசங்களில் ஒரே நாளில் பல்லாயிரக்கணக்கான மரக்கன்றுகளை நாட்ட திட்டமிட்டுள்ளோம் என்றும். இச் செயற்றிட்டமானது இவ்வாண்டின் இறுதிக்குள் நடைபெறும் என்றும்

அந்த வகையில் இம் மரக்கன்றுகளை தொடர்ச்சியாக பராமரித்து வளர்ப்பவர்களுக்கு கௌரவம் எனும் சான்றிதழ் ஒன்றையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்றும் பியூச்சர் மைண்ட் (Future Mind) அமைப்பின் இயக்குனர் ம.ரஞ்ஜன் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலய மாணவர்கள் சாதனை



முரளி

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சின் அனுசரணையில் நடத்திய போட்டியில் தமிழ் மொழிமூலம் மாகாணமட்டத்தில் 16 பாடசாலைகளும் தேசிய மட்டத்தில் 7பாடசாலைகளும் போட்டியிட்டு இருந்தன.

இதில் இலங்கையின் அதியுயர் அரங்க விருதுகளில் ஒன்றான டவர் திரையரங்கு விருதுகளில் 5 விருதுகளைப் பெற்று மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வர வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இந்த ஆண்டுக்கான சிறந்த நடிகை, சிறந்த நாடகப்பிரதி, சிறந்த நாடக உடையமைப்பாளர், சிறந்த நாடக துணை உடையமைப்பாளர், சிறந்த தயாரிப்பு என்பவற்றிக்காக இவர்கள் விருதுகளைப் பெற்றுள்ளனர். சிறிய பாடசாலையின் மாணவர்களாயினும் தங்களது திறமையை வெளிக்கொணர முடியுமென நிருபித்துள்ளனர்.
இவர்களது முயற்சிகள் மேலும் வளர வாழ்த்துக்கள் .

## 49 ஆவது இலக்கியச் சந்திப்பு × வன்னி (கிளிநொச்சி)

பிராந்திய கால்நடை அபிவிருத்திப் பயிற்சி நிலைய மண்டபம்

(மத்திய வங்கியின் பிராந்திய நிலையத்துக்கு அருகில்)

அறிவியல் நகர், கிளிநொச்சி
காலம் : 2019 செப்ரெம்பர் 21, 22 சனி, ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை முன்வைப்புகளும் உரையாடலும்

1. வன்னி – நிலம், நீர், சமூகம்
2. வறுமையின் நிறம் பச்சை – பிரதிகள் காட்டும் வழி?
3. வன்னிக் காடு – வாழ்வும் அரசியலும் (பிரதிகளில் உள்ளடக்கப்பட்டவையும் உள்ளடக்கப்படாதவையும்)
5. முஸ்லிம் சமூகமும் சமகால நெருக்கடிகளும்
6. அந்தரிப்புக்குள்ளானோரும் சமூகத்தின் பொறுப்பும்
(காணாமலாக்கப்பட்டோர் மற்றும் போரில் இழப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தோர் பிரச்சினை)
7. இலக்கிய அரசியல்: உண்மையும் விடுபடலும்
8. பிரதிகளில் இயற்கை, சூழல், உயிரினங்கள் (வரலாற்றுச் சித்திரிப்பும் புதிய உணர்தல்களின் அவசியமும்)
9.போருக்குப் பிந்திய ஈழ இலக்கியம்: கச்சாப்பொருள், சந்தை, பதிப்பு முயற்சிகள்
10. போரின் பின்னான பத்திரிகைகள்: அறிக்கையிடலின் உளவியல்
11. ஈழ அகதிகள்: தமிழகத்திலும் தமிழகத்திலிருந்து ஈழத்திலும்
12. போருக்குப் பின்னரான சிறுகதைப் பிரதிகள் மீதான வாசிப்பும் புரிதலும்
13. தெய்வம் – சடங்கு – மரபு: வன்னி நிலமும் கையளிப்புகளும்
14. வரலாற்றின் பயணவழியில் மக்கள் பண்பாடும் போர்ச்சுவடுகளும்
15. மரபும் நவீனமும்: மன்னார்ப்பண்பாட்டு இடையசைவுகள்
16. திரையும் நிஜமும்

litmeetvanni@gmail.com
தொலைபேசி எண்கள்
0770871681, 0777577932

தொடர்ச்சி...

## காணாமல் ...

விரும்பியிருக்கவில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி முதல் ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதி பாதிக்கப்பட்டு பதிவு செய்துள்ள உறவினர்களின் வங்கிக் கணக்கிற்கு ஆறாயிரம் ரூபா வைப்பிலிடப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனரட்ன கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஆனால் ஏற்கனவே பதிவு செய்த உறவினர்கள் இந்தத் தொகை போதுமானதல்ல என்றும் இதனை ஏற்க முடியாதென்றும் ஆரம்பம் முதல் கூறி வருகின்றனர்.

அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான நீதி கிடைக்கும் வரை எந்தவொரு நிவாரணங்களையும் பெறமுடியாதென வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் ஏற்கனவே கூறியிருந்தது.

வவுனியாவில் தொள்ளாயிரம் நாட்களையும் கடந்து தொடர் போராட்டம் நடத்தி வரும் உறவினர்கள் "இல்லாமைச் சான்றிதழ்" பெறுவதற்கான பதிவுகளை புறக்கணித்திருந்தனர்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தில் நம்பிக்கை இல்லையெனவும் கூறி வருகின்றனர்.

குறிப்பிட்ட சில உறவினர்கள் மாத்திரமே அந்த அலுவலகத்தில் பதிவு செய்து இல்லாமைச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களும் மாதம் ஆறாயிரம் ரூபா வழங்கப்படுவதை ஏற்க மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் அமைச்சரவை ஆறாயிரம் ரூபா வழங்குவதென முடிவு செய்துள்ளது. மாதம் ஆறாயிரம் ரூபா போதுமானதல்ல என்று தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் கூறியிருந்தார்.

## கடித்த நாயைத் திருப்பிக் கடிக்கும் தமிழினம்

(நிஷாந்த் நிஷாந்தன் என்பவரின் முகநூலில் இருந்து...)

ஜப்பானும், ஜேர்மனியும் யுத்தத்தில் நிர்மூலமாக்கப்பட்ட பிறகு அந்நாட்டு மக்கள் எவரும் கடித்த நாயைத் திருப்பிக் கடித்துவிட்டே மறுவேலை எனக் கிளம்பவில்லை!
மாறாக பொருளாதாரத்தை_நிமிர்த்தவே_ போராடினார்கள். பொருளாதாரத்தால் எதிரியுடன் சமகதிரையில் உட்காந்திருந்து பேரம்பேசுவதே உண்மையான வெற்றி என அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது.

விளைவு??

1. தோற்கடித்தவர்களின் வாகனங்களைவிட முதற்தர வாகனங்களை உலகுக்கே ஏற்றுமதி செய்தார்கள்.

2. எதிரிகளே அசந்துபோகும் தொழில்நுட்பங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

3. சரிக்குச்சமன் உலக அரங்கில் தோற்கடித்தவர்களுடன் வலம் வந்தார்கள். சில இடங்களில் சற்று மேலே எனலாம். இன்னும் பல...

அவ்வளவும் எண்ணி 20 வருடங்களில்! ஆனால் நாம்?????

1. கடித்த நாயைத் திருப்பிக்கடிக்க வெறிபிடித்து அலைகிறோம்.

2. கடித்துவிட்டால் வெற்றி என மாயையில் மிதக்கிறோம்.

3. மாறிவந்த உலக ஒழுங்கில் யுத்தம் தவிர்க்கமுடியாதது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்.

4. பொருளாதாரத்தின் மீள்கட்டுமானம் பற்றி எவ்வித அக்கறையும் இல்லை.

5. நிவாரணம் வாங்கிச் சாப்பிட மனதை பழக்கப்படுத்தியாயிற்று.

6. உற்பத்தியைப்பற்றி அக்கறை இல்லை. எல்லாவற்றையும் எவனிடமாவது கொள்வனவு செய்வதில் பெருமை வேறு!

7. உசுப்பேற்றல்களுக்கு_இன்னும் எடுபடுகிறோம்.

8. எல்லாவற்றிற்கும் அடுத்தவன்மேல் பழிபோடுகிறோம்.

9. எவனாவது ஒருவன் இவற்றையெல்லாம் புரிந்துகொண்டு எழும்பினால் அவனை மடையன் என்று முத்திரை குத்தி அமர வைக்கிறோம்.

10. பொருளாதாரம் நிமிர எல்லாமே சரியாகும் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்.

11. ஒன்றுமில்லை என்று தெரிந்த பிறகும் அரசியல்வாதிகளை நம்பிக்கிடக்கிறோம்.

# “தோட்டக்காட்டான்...”

**சீவகன் பூபாலரட்ணம்**

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கூட்டத்தில் பேசிய பேச்சு கடந்த வாரத்தில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது. பல தமிழர்கள் அவரைத் திட்டித்தீர்த்தார்கள். அவர் ஒரு கருத்துச் சொல்ல, அதனை மற்றவர்கள் விமர்சித்தனர். இதனைவிட அவர் பேசிய விடயம் ஊடகங்களில் சரியாக அறிக்கையிடப்பட்டதா என்ற சந்தேகமும் பலரால் கிளப்பப்பட்டுள்ளது. அது இப்போது பழைய விடயமாகியும்விட்டது. அதனைப் பற்றி நான் இங்கு பேசப்போவதில்லை. ஆனால், அந்த விமர்சனங்களில் சிலர் பயன்படுத்திய சில சொற்பிரயோகங்களை என்னால் இலகுவாகக் கடந்து போக முடியவில்லை.



அந்தச் சொல்தான் “தோட்டக்காட்டான்”. சிலர் இந்தச் சொல்லை மிகவும் இலகுவாகப் பயன்படுத்திக் கொண்டு செல்வதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. ஒருவரைத் திட்டுவதாகக் கூறி ஒரு சமூகத்தையே இழிவாக, மனதைப் புண்படுத்த எப்படி இவர்களால் முடிகிறது?

இலங்கையில் சுதந்திரம் கிடைத்த பின்னரும் அண்மைய தசாப்தங்கள் வரை இந்த நாட்டுக்கு அதிக வருமானத்தை பெற்றுக்கொடுத்து வந்தவர்கள் இந்த வந்தேறு குடிகளான மலையக இந்திய வம்சாவழித் தமிழர்கள்தான். அதாவது தோட்டக்காட்டார்கள். அதுவும் பல சந்ததிகளாக இந்த நாட்டுக்கு உயிரைக் கொடுத்து உழைத்துக் கொட்டிய பின்னரும் குடியுரிமை நிராகரிக்கப்பட்டு, சொந்தமாக ஒரு வீட்டுக்கு வழியில்லாமல் நம்மால் வைக்கப்பட்டவர்கள்தான் இவர்கள். இன்றுவரை உறுதியான ஒரு ஊதியத்தை அவர்களுக்கு கொடுக்க முடியாத, ஏற்பாடு செய்ய முடியாத ஒரு வெட்கம்கெட்ட நாட்டின் பிரஜைகள் நாங்கள்.

குளிரில் வேலை செய்வது என்பது எவ்வளவு கொடியது என்பது புலம்பெயர்ந்து வந்த தமிழர்களுக்கு ஓரளவு தெரியும். ஆனால், அட்டைக் கடி தெரியுமா? தோட்டக்காட்டில் அட்டை எவ்வளவு வேகமாகக் காலில் ஏறும் என்பதும் எப்படி இரத்தத்தை உறிஞ்சும் என்பதும் இவர்களுக்கு தெரியுமா? அந்த உணர்வு இவர்களுக்கு புரிய நியாயமில்லை. தோட்டக்காட்டானின் காலைக் கழுவி குடித்தால்தான் இவர்களுக்கு அது புரியும்.

அவன் இரத்தத்தைக் கொடுத்து நாட்டுக்கு உழைத்துக்கொடுக்க, அந்த வலியைப் புரிந்துகொள்ளாத இவர்கள் எல்லாம் போலித் தமிழ் தேசியவாதிகள். மீண்டும் சொல்கிறேன் இவர்கள் போலித் தமிழ் தேசியவாதிகள். உண்மையான தமிழ் தேசியம் இன்னுமொரு இனத்தை ஏளனம் செய்யாது. அவன் மனதைப் புண்படுத்தாது. அவன் உணர்வைப் புண்படுத்தாது.

நீரிழிவு நோயோடு குடாரப்பில் தரையிறங்கி, கடற்கரை மணலில், நடு வெயிலில் காலூன்றி வழிமறிப்புத்தாக்குதல் செய்த தளபதி பால்ராஜின் தீரம், அந்த தோட்டக்காடு அவரது பரம்பரைக்கு கொடுத்த உறுதியால் வந்தது. டயபிட்டிக் இருக்கிறவர்கள் ஒரு மணிநேரம் அனல் வெயிலில் கடற்கரை உப்புக்காற்றில் நின்றுபாருங்கள் அந்த தோட்டக்காட்டானின் உறுதி தெரியும். இவையெல்லாம் நடந்த பின்னரும் இந்த வார்த்தையைச் சொல்ல எப்படி இவர்களுக்கு மனது வருகிறது. கடைசியில் வன்னியில் எஞ்சி நின்றவர்களில் கணிசமானவர்கள் மலையகத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்பதைக்கூடவா இவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

இது ஒன்றும் புதிய விடயமுமல்ல. வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு இது பழகிப்போன விடயம். தனிநாடு கேட்பதாக கூட்டணி பிரகடனம் செய்ய, அதில் இருந்து விலகிப் போனது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். தனிநாடு என்பது மலையகத் தமிழர்களுக்கு பொருத்தமற்றது என்று அவர்கள் விலகி நின்றார்கள். அப்போதே ஆரம்பித்துவிட்டார்கள் இவர்கள் “தோட்டக்காட்டனை நம்ப முடியாது, வடக்கத்தயானை நம்ப முடியாது” என்று. அதற்கு முதலும் இந்தப் பழிப்பு இருந்தே வந்திருக்கிறது.

தனியான பாதையில் போன இதொகா மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுத்தது. “அதனால்தான் இது கிடைத்தது, இதனால்தான் அது கிடைத்தது” என்றெல்லாம் விதண்டாவாதம் செய்யலாம். ஆனால், பிரஜாவுரிமை கிடைத்ததுதான் யதார்த்தம். அவர்களைப் பழித்த நீங்கள் இன்றுவரை எதனைப் பெற்றிருக்கிறீர்கள்? ஒன்றைச் சொல்லுங்கள்.

மரப்பாலத்தில் ஒரு பொது நிகழ்வில் கலந்துகொண்ட போது அங்கு இரு குழுவினருக்கு இடையே முறுகல் வர, அதனைச் சமாளித்து வந்த பின்னர் கரடியனாற்றில் வைத்து ஒரு தம்பி சொன்னார் “வடக்கத்தானை நம்ப முடியாது” என்று. அவர் சொன்னது எனது மனைவியிடம். எனது மனைவி இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். மலையகத்துக்காக அவர் ஒரு துரும்பைக்கூட தூக்கிப் போட்டது கிடையாது. ஆனால், மட்டக்களப்பானைக் கட்டியதற்காக இந்த ஊரில் வந்து நிறையச் செய்திருக்கிறார். இதனைப் போல எத்தனை பேரின் மனைதப் புண்படுத்தியிருக்கிறீர்கள்.

மனோ கணேசன், இராதாகிருஸ்ணன் உட்பட பல இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமைச்சர்களிடம் பதவி உயர்வுக்காகவும் இடமாற்றத்துக்காகவும் சென்று வந்த வடக்கு கிழக்கு அரச பணியாளர்களில் ஒரு சிலராவது, அவர்கள் அந்தப் பக்கம் போன பின்னர் “தோட்டக்காட்டான்” என்று முதுகுக்குப் பின்னால் சொல்லவில்லை என்று உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள்.

அவர்களைப் பழித்துப் பழித்து நீங்கள் இருந்ததையும் இழந்தீர்கள், அவர்கள் குடியுரிமை பெற்றார்கள், இன்னும் மேலே போய்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இன்று அவர்களைப் பார்த்துப் பழிப்பது அவர்களை இனி ஒன்றும் செய்யாது. ஆனால், இது உங்கள் நிலையைத்தான் குறைக்கும்.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களை கொழும்பில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள்கூட “தோட்டக்காட்டான்” என்று இழிவுபடுத்திப் பேசுவதையும் நான் கேட்டிருக்கிறேன். இது இன்னுமொரு வகை.

சக இனத்தை, அதுவும் நமது இனத்தின் இன்னுமொரு பிரிவை இழிவாகப் பேசும் எந்த இனமும் உய்ய முடியாது. நாம் கற்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறது. இது பல்கலைக்கழகம் சென்று கற்பதல்ல. அங்கு சென்று இதனைக் கற்க முடியாது. நமது அடிமனதில் இருந்து இது வரவேண்டும். இங்கு நானும் உத்தமனில்லை. படிப்படியாகத்தான் இவற்றை உணர்ந்திருக்கிறேன். பழசுகளை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், இளைஞர்கள் இப்போதாவது விழித்துக்கொள்ளுங்கள்.

தொடர்ச்சி பக்கம்..15

---



## சொல்லத் துணிந்தேன்! 22

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்' என்று தமிழ்த்தேசியக்கட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இலங்கைக்கான ஜப்பானின் முன்னாள் விசேட தூதுவரும் ராஜதந்திரியுமான யசூசி அகாசியிடம் சுட்டிக் காட்டியுள்ளதாக வெளியாகியுள்ள பத்திரிகைச் செய்தி படித்தேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இப்படியான இராஜதந்திரிகளுக்கும் இடையிலான இவ்வாறான சந்திப்புகள் இடம்பெறுவதும் அச்சந்திப்புகளின்போது சம்பந்தன் அவர்கள் இவ்வாறு தெரிவிப்பதும் ஒரு வாடிக்கையான நிகழ்வாகவும் அதனைத் தமிழ்த்தேசிய நாளிதழ்கள் தலைப்புச் செய்தியாக அல்லது முன்பக்கச் செய்தியாகக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிப்பதும் ஒரு வேடிக்கையான விடயமாகவும் ஆகிவிட்டன.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை சர்வதேசம் என்பது ஒரு 'மாயமான்'. அதற்குப் பின்னால் சென்று ஒன்றும் ஆகப்போவதில்லை. அவை வெறும் 'சிலுசிலுப்பு'களே தவிர அவற்றில் 'பலகாரம் ஒன்றுமில்லை. தமிழ்மக்களுக்கு இன்று தேவைப்படுவது குறிப்பாகக் கிழக்குத்தமிழர்களுக்கு இன்று தேவைப்படுவது அவர்களது இருப்பைத் தக்கவைத்துப் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் வகையில் அவர்களைச் சமூக பொருளாதார ரீதியாக வலுப்படுத்துகின்ற செயற்பாட்டு அரசியலே தவிரக் கடந்து எழுபது வருடகாலமாகத் தமிழரசுக்கட்சிக் காலத்திலிருந்து இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் காலம்வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் வெறும் 'ஏட்டுச்சுரைக்காய்' அரசியல் அல்ல.

தீர்மானங்கள் - ஒப்பந்தங்கள் - தேர்தல் விஞ்ஞாபனங்கள் - பாராளுமன்ற உரைகள் - பத்திரிகை அறிக்கைகள் - மகஜர்கள் - இராஜதந்திர ரீதியான சந்திப்புகள் எனக் கடந்த எழுபது வருடங்களாகத் தொடர்ந்துவரும் தமிழர்தம் 'ஏட்டுச்சுரைக்காய்' அரசியலால் இருந்ததையும் இழந்ததுதான் மிச்சம். பட்டுவேட்டிக்கனவில் கோவணத்தை இழந்ததுதான் தமிழர் அரசியலில் நடந்தேறியிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தமிழர்களைப் பொறுத்தவரை தங்கள் வாழ்விடங்களையும் - வயற்காணிகளையும் - வணக்கத்தலங்களையும் பறிகொடுத்தது மட்டுமல்லாமல் உயிர் அழிவுகளுக்கும் சொத்தழிவுகளுக்கும் உள்ளாகி, கிராமியப் பொருளாதாரக் கட்டமைப்பு சிதைவுண்டு பண்பாட்டு விழுமியங்களும் சீரழிந்து ஒரு பலவீனமான சமூகமாக இன்று திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்டுள்ளார்கள். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல கல்முனை விவகாரம் கண்முன்னே தெரியும் ஒரு உதாரணம்.


ஒரு வருடம் போராடியும் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் 'கனகர்கிராமம்' பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தனது சொந்த மாவட்டமான திருகேணமலையில் 'கன்னியா'ப் பிரச்சினையில் கூட இரா. சம்பந்தன் அவர்கள் கையாலாகாதவராகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் ஏற்பட்டுள்ள நிலைமை தமிழர்களுக்கு நாளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தியிலும் (வாழைச்சேனை), மறுநாள் திருகோணமலை மாவட்டத்தில் மூதூரிலும் (தோப்பூர்) இன்னும் சில வருடங்களில் முழுக் கிழக்குமாகாணத்திற்கும் ஏற்படப்போகிறது. இது பற்றிய எச்சரிக்கை உணர்வுகூடத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை. 'போர்க்குற்ற விசாரணை' - 'புதிய அரசியலமைப்பு' – 'சர்வதேசம்' என இல்லாத ஊருக்குத் தமிழ்மக்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஏமாற்றி அழைத்துச் செல்லுகின்ற ஏட்டுச்சுரைக்காய் அரசியலைத்தான் முன்னெடுத்துவருகிறார்கள்.

அதேவேளை தமிழ்மக்கள் அரசியலை அறிவுபூர்வமாகச் சிந்திப்பதைத் தடுப்பதற்காகவும் மாற்று அரசியல் சிந்தனைகளை மழுங்கடிப்பதற்காகவும் ஐக்கிய தேசியக்கட்சி போட்ட 'மடிப்பிச்சை'யான 'கம்பரெலிய' வேலைத் திட்டங்களை ஆங்காங்கே அள்ளித் தெளித்து மக்களை ஏமாற்றித் தேர்தல்களில் வாக்குச் சேகரிக்கும் தங்கள் வழமையான அரசியல் பாணியையும் முடுக்கிவிட்டுள்ளனர். அரசியல் தீர்வைப் பொறுத்தவரை எல்லாம் நுழைந்துவிட்டது, வால் மட்டும் இன்னும் நுழையவில்லை என்கின்றனர். அரசியல் தீர்வையும் அபிவிருத்தியையும் சமகாலத்தில் முன்னெடுக்கும் செயற்பாட்டு வீரர்களாகத் தங்களைச் செயற்கையாகக் காட்டி மக்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகவே 'கம்பரெலிய'வைக் கையில் எடுத்துள்ளனர்.

இந்த ஏமாற்றுவித்தைகளால் தமிழ்மக்கள் குறிப்பாகக் கிழக்குத் தமிழர்கள் ஏமாந்து விடக்கூடாது. கிழக்கின் அரசியல் அரங்கிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை முற்றாகத் துடைத்தெறியும் அரசியல் செயற்பாடுகளைக் கிழக்குத்தமிழர்கள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கவேண்டும். இதற்குக் 'கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு' தலைமையேற்று வழிகாட்டும் நாள் நெருங்கிவிட்டது.

# ரணில் - சஜித் சந்திப்பு: உண்மையில் நடத்தது என்ன?





ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர் மலிக் சமரவிக்ரமவின் செயற்பாடுகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முகத்திற்கு நேராக அவரிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு கடும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தொடர்பாக அலரிமாளிகையில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர் மலிக் சமரவிக்ரமவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தனது கடுமையான எச்சரிக்கையை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைக்கு எந்தவித அழைப்புமின்றி அமைச்சர் கபீர் ஹபீர் காசிமோடு மலிக் சமரவிக்ரம சென்றிருந்தார். இதனால் ரணில் விக்கிரமசிங்க ஆத்திரமடைந்தார். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரான அமைச்சர் ரவி கருணாநாயக்க குறித்து எதிர்மறையான விமர்சனத்தையும் மலிக் சமரவிக்கிரம ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்தார். இதனாலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் எச்சரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகின்றது.

**அ. நிக்ஸன்**

உம்மைப்போல தேசிய பட்டியலில் அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிக்கவில்லையென மலிக் சமரவிக்கிரமவைப் பார்த்து ரணில் விக்கிரமசிங்க கடும் தொனியில் கூறியுள்ளார். கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு அனைத்துப் பிரச்சினைகளிலும் தலையீடு செய்யவும், கருத்துக்களைக் கூறவும் உரிமையுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அதேபோல இந்தப் பேச்சுவார்த்தைக்கு அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு மட்டுமே அழைப்பு விடுத்திருப்பதாக மறைமுக தாக்குதல் ஒன்றை மலிக் சமரவிக்ரம மற்றும் கபீர் ஹாசிம் மீது மேற்கொண்ட பிரதமர், பேச்சுவார்த்தை செய்ய தனித்து வரும்படி அழைத்திருந்த நிலையில், கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத காரணத்தினாலேயா இவ்வாறு கூட்டமாக வந்திருக்கிறீர்கள் என்றும் சஜித் பிரேமதாஸவிடம் ரணில் விக்கிரமசிங்க வினாத் தொடுத்ததாகக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. ஆனாலும் இவ்வாறு ஆத்திரத்தோடு மோதுப்பட்டுக் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் விவகாரங்களை இருவரும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட ரணில் விக்கிரமசிங்கவும் விரும்புவதாக அரங்கம் செய்திகள் பத்திரிகை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அவ்வாறே ரணில்

தொடர்ச்சி பக்கம்..15

# ஜனாதிபதி தேர்தல் - யார் இந்த ஜேவிபியினர்?



எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியுடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடைய ஐந்தாண்டுகால பதவி வறிதாகின்றது. அதனடிப்படையில் இலங்கையின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சிகள் தத்தமது வேட்பாளர்களை முன்னிறுத்தி பிரச்சாரங்களை ஆரம்பித்தும் விட்டன. ஆனால் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியோ பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியோ வேட்பாளர்களை அறிவிப்பதில் இன்னும் இழுபறி நிலையிலேயே உள்ளன.

இந்நிலைமையானது இலங்கையை கடந்த எழுபது வருடமாக மாறிமாறி ஆட்சி செய்து வரும் இருபெரும் கட்சிகளுக்கு வெளியே உள்ள வேட்பாளர்களை நோக்கி இம்முறை மக்கள் அதிக கவனம் செலுத்தும் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் அதிக முக்கியத்துவம் பெறவுள்ளன.

புதிய கட்சியாக இருந்த போதிலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ராஜபக்ஸ வம்சத்தின் தொடர்ச்சியாகவுள்ளது. அவர்களின் பலம், பலவீனம் பற்றிய இரண்டு விடயங்கள் இருந்தாலும் பலவீனம் சார்ந்த குற்றச்சாட்டுக்கள் பழங்கதைகளாய் போய்விட்டன. ஆகவே அவர்களின் பலம் அதாவது மகிந்தவின் அபிவிருத்தி சாதனைகள்

**அறுமக்குட்டி போடி**

மீண்டும் ஒருமுறை இத்தேர்தலில் பேசுபொருளாக்கப்படும்.

அதேவேளை பழைய கட்சியாக இருந்த போதிலும் ஜேவிபி புதிய முகத்தோடு அதாவது கொள்கைசார் ரீதியிலும் தங்களை ஒரு புதிய கட்சியாக எதிர்காலம் பற்றிய நம்பிக்கை தரும் கட்சியாக ஒரு தோற்றப்பாட்டை உருவாக்க முயல்கின்றது. வேட்பாளர் விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி இரண்டுபடும் சந்தர்ப்பங்கள் உருவாகுமானால் எதிர்வரும் தேர்தல் முழுக்க முழுக்க வித்தியாசமானதாக இருக்கும். காரணம் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனித்து போட்டியிட்டாலும் அது வெற்றி வாய்ப்பை நோக்கி நகருவது என்பது எதிர்பார்க்கக்கூடியதொன்றல்ல. எனவே ராஜபக்ச வம்சத்துக்கும் ஜேவிபிக்குமிடையிலான நேரடிப்போட்டிக்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்று எதிர்பார்க்கலாம்.

எப்படியிருந்த போதிலும் வழமைக்கு மாறாக ஜேவிபி யும் இம்முறை நட்சத்திர வேட்பாளர்களை நோக்கி சார்பு நிலை எடுக்காமல் நேரடியாகவே களத்தில் இறங்கியிருப்பது முக்கியமானதொன்றாகும். இதன் காரணமாக மும்முனைப்போட்டியொன்றுக்கான சூழலும் நிலவுகின்றது.

எனவே யாரிந்த ஜேவிபியினர் என்பது குறித்த புரிதல்களை நோக்கி சற்று நகருவோம். ரஸ்யாவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு நாடு திரும்பிய இருபத்தி மூன்றே வயது மட்டும் நிரம்பிய அந்த இளைஞன் 1965ஆம் ஆண்டு இந்த அமைப்பை உருவாக்குகின்றான். நாட்டில்அனைத்து மக்களுக்குமான சோஷலிச சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே தனது அமைப்பின் கொள்கை என அறிவிக்கின்றான். வெறும் ஐந்தே வருடங்களில் குறிப்பாக தென்னிலங்கையின் பெருந்தொகையான இளைஞர்கள் அவன் பின்னால் அணிவகுக்கின்றனர்.

சோசலிசம் குறித்து பேசிய போதிலும் இன வரையறைகளை தாண்டிய வர்க்க ஒற்றுமையொன்றை கட்டியெழுப்புவது பற்றிய செயற்பாடுகள் அவர்களிடம் இருக்கவில்லை. முழுக்க முழுக்க சிங்கள தேசியவாத சக்திகளின் சிந்தனையோட்டத்தையும் சிறுபான்மையினங்களை விடுத்து பெரும்பான்மை சிங்கள இனத்தினை அடிப்படையாக கொண்டால் மட்டுமே புரட்சி சாத்தியமாகும் என்கின்ற எளிமையான கோட்பாட்டையுமே அவர்கள் முன்னிறுத்தினர். சுருங்க சொன்னால் மாவோயிச, திரோஸ்கிய, ஸ்டாலினிச, சேகுவராயிச கலவையாக அவர்கள் சிங்கள தேசிய வாதத்தை சோசலிசத்தின் பெயரில் முன்மொழிந்தனர்.

இலங்கையில் வாழ்ந்துவந்த இந்திய வர்த்தகர்களையும் , இந்திய வம்சாவளி மலையக மக்களையும் ஒரே கூடையில் வைத்து கணிப்பிட்டனர். செட்டிமார், போராக்கள் போன்றோரது மூலதனங்களின்கீழ் உழைப்பாளிகளாக இருந்த மலையாளிகளைக்கூட தமது வர்க்க எதிரிகளாக அவர்கள் சித்தரித்தனர். மலையக மக்கள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் ஒருபகுதியாக அதாவது செயற்படுபவர்கள் என்பதே ஜேவிபியின் பார்வையாக இருந்தது. அவர்களது அரசியல் பாசறையின் ஐந்தாம் பாடம் என்பது இந்திய மேலாதிக்கம் பற்றியதாயிருந்தது. புரட்சிக்கான காலம் நெருங்கிக்கொண்டிருந்தது.

ஆனால்-----

1971 மார்ச் மாதம் 13ஆம் திகதி அம்பாறையில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்த 70க்கும் மேற்பட்ட ஆயுதமேந்திய போலீசார் அந்த இளைஞனை கைது செய்து மட்டக்களப்பு சிறையில்அடைப்பதில் வெற்றி காணுகின்றனர். அதன்பின்னரே இலங்கையின் மூலை முடுக்குகள் எங்கும் ரோகண விஜயவீரா என்னும் பெயர் பிரபல்யமானது. தலைவரின் கைதோடு அவர்களது புரட்சிக்கான திட்டங்கள் நிர்மூலமாகின்றன. மிகக்கடுமையான இராணுவ நடவடிக்கைகளால் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களை கொலைசெய்து இரண்டுவார காலங்களில் அனைத்து கிளர்ச்சிகளும் அடக்கப்பட்டு ஜேவிபி

தொடர்ச்சி பக்கம்..15

# கட்சிகளின் ஒற்றுமைப் பேச்சும் அதனுள் ஒளிந்திருக்கும் அரசியலும்




தேசிய அரசியலைப் பொறுத்தளவில், சனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகள் தங்களுடைய வேட்பாளரை அறிவித்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியில் இழுபறி தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை நம்பியிருக்கும் பல கட்சிகளுக்கு இதுவொரு சங்கடமான நிலையாகவே இருக்கின்றது.

முக்கியமான தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு சனாதிபதித் தேர்தலை எவ்வாறு வெற்றிகொள்வது என்பதுதான். அதற்கான தந்திரோபாயமாக பௌத்த பேரினவாதத்தையும் பகைக்காமல் அதையும் நட்பாக்கிக் கொண்டு சிறுபான்மையினரின் விருப்பையும் பெற்றுக்கொண்டு எவ்வாறு சனாதிபதியாகுவது என்பதாகவே இருக்கின்றது. இந்த வேட்பாளர்கள் சனாதிபதி ஆகும் வரை சிறுபான்மையினரைக் கவரக் கூடிய எந்த வேசமும் போட்டு ஆடத் தயாராக இருக்கின்றார்கள் என்பது அவர்களின் அண்மைக்கால அறிக்கைகளிலிருந்தும் பேச்சுக்களில் இருந்தும் தெளிவாகின்றது. சனாதிபதியானவுடன் அவரவர் சுய முகத்தைக் காட்ட ஆரம்பிப்பார்கள். நிச்சயமாக அது பௌத்த பேரினவாதத்துக்கு எதிரான முகமாக இருக்கப் போவதில்லை என்பது கடந்த கால அனுபவங்களின் படிப்பினையாகும்.

கிழக்கு அரசியலைப் பொறுத்தவரையில் தமிழ் கட்சிகள் எல்லாம் ஒரே அணியில் நின்று அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற விருப்பமே மக்களிடம் உள்ளது. ஆனால் வாக்குவங்கி உள்ள கட்சிகளாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் மக்களின் விருப்பை பெரியதொரு விடயமாக எடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தப் பேயுடனும் கூட்டுச் சேர்வோமே தவிர தங்களின் கொள்கைக்கு மாறான கொள்ளையுடைய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியுடன் மாத்திரம் கூட்டுச் சேர முடியாது என்பதில் மிக உறுதியாக உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிடுவது போல் கொள்கையின் அடிப்படையில் இது கூறப்படவில்லை. அவ்வாறான ஒரு கொள்கையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கவில்லை. உண்மையில் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தால் வடக்கில் உள்ள தமிழர்கள் தங்களை நிராகரித்து விடுவார்கள் என்ற பயமும் தமிழ்த் தேசியத்தை வைத்து நீண்டகாலத்துக்கு அரசியல் செய்யமுடியாது என்கின்ற அச்சமும்தான் காரணங்களாகும். இதனால் கிழக்கு மக்களின் நலன் என்பதிலும் பார்க்க தங்களுடைய கட்சியினதும் அதன் உறுப்பினர்களினதும் நலனை அடிப்படையாகக் கொண்டே அது செயற்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களின் அரசியலைப் புரிந்து கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 'கிழக்குத் தமிழ் மக்களுக்காக நாங்கள் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்து கூட்டமைப்பினருடன் இணைந்த செயற்படத் தயாராக இருக்கின்றோம்' எனக் கூறுகின்றார்கள். இது உண்மையில் தங்களை மக்கள் நலன் உள்ளவர்கள் என்றும் கூட்டமைப்பினர்தான் மக்கள் நலன் அற்றவர்கள் என்று அரசியல் செய்யும் வியாபாரமே ஒழிய, இவர்களும் உண்மையான ஒற்றுமையை விரும்புபவர்கள் அல்ல. அவ்வாறு விரும்புபவர்களாக இருந்தால் சிறிய கட்சி, பெரிய கட்சி, வாக்குப் பலமுள்ள கட்சி, வாக்குப் பலமற்ற கட்சி என்ற வேறுபாடுகளை மறந்து தங்களுடன் இணையக் கூடியவர்களுடன் இணைத்து ஒரு கூட்டு அரசியலை முன்னெடுத்திருப்பார்கள். கூட்டமைப்பினர் தங்களை பலம்வாயந்த் தமிழர்களின் கட்சி என்று பார்ப்பது போன்று ரிஎம்விபியும் கிழக்கில் இனி நாங்கள்தான் அரசன் என்று நினைக்கிறார்கள். கூட்டமைப்பினரும் ரிஎம்விபியினருக்கும் இவ்விடயத்தில் ஒரே சிந்தனையுடையவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

'ஒரே அணி' என்கின்ற வார்த்தை, வாக்குப் பலமற்ற உதிரிக் கட்சிகளும் நேற்று முளைத்த கட்சிகளும் தங்களுடைய வாக்கு வங்கியை பங்கிட்டுக் கொள்வற்கான அரசியல் எனப் பார்ப்பதிலும் இரு கட்சிகளுக்குமிடையில் வேறுபாடுகள் எதுவும் இல்லை.

மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றோம் என முன்னுக்கு வந்த 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' போன்ற அமைப்புகள் தங்களுடைய நோக்கத்திலிருந்து விலகி தங்களுக்குள்ளே ஒற்றுமையின்றி 'ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சி' என்ற ஓர் அரசியல் கட்சியாக தங்களை முன்னிலைப்படுத்தியதன் விளைவாகவும் மேற்படி பார்வைகளை இக்கட்சிகளுக்கு கூர்மைப்படுத்தியிருக்கின்றது எனலாம்.

கிழக்குத் தமிழர் ஒன்றியமும் இதையொத்த அரசியலை முன்னெடுத்துள்ளதை பத்திரிகைகள் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது. அதாவது ஒன்றித்துப் பயணிப்பதற்கான பேச்சுவார்த்தையொன்றினை மேற்கொள்வதற்கு 15ம் திகதிக்குள் ஒரு திகதியை வழங்குமாறு கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி அருளானந்தம் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் திரு. துரைராஜசிங்கம் அவர்களைக் கேட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் கட்சிகள் தங்களுக்கிடையில் மக்கள் நலன்சார்ந்து பேசுவது ஒன்றும் அதிசயமான விடயம் கிடையாது. கடந்தவாரம் ரிஎம்விபியினருக்கும் கிழக்குத் தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்குமிடையில் ஒற்றுமை தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன. ஆனால் அதன் திகதிகேட்டு ரிஎம்விபி செயலாளருக்கு கிழக்குத் தமிழர் ஒன்றியச் செயலாளர் அனுப்பிய கடிதம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவில்லை. அப்படியாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பேச்சுவார்த்தைக்கான திகதியை கேட்பதை மட்டும் பத்திரிகைகளுக்கு அனுப்பி அதனை பிரசுரிப்பதன் அரசியல் என்ன என்பதுதான் எம்மிடம் உள்ள கேள்வியாகும்.

இது உண்மையில் பேச்சுவார்த்தை, ஒற்றுமை என்பதிலும் பார்க்க நாங்கள் ஒற்றுமைக்கு முயற்சித்தோம் கூட்டமைப்பினர்தான் அதனை விரும்பவில்லை என்று மக்களிடம் தங்களைக் கொண்டு செல்வதற்கான ஒரு ஆயுதமாக இந்தச் செய்தியை எடுத்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியேயாகும். உண்மையான மக்கள் நல நாட்டத்துடன் கிழக்குத் தமிழர் ஒன்றியம் இருக்குமானால் கடந்த வருடம் ஒற்றுமைக்காக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த கிழக்குத் தமிழர் ஒன்றிய ஸ்தாபகர்களில் ஒருவரான திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களுடன் இணைந்து அப் பேச்சுவார்த்தைகளில் தான் ஒரு பதில் நீதவானாக இருக்கும் போது கலந்து கொள்ள முடியாது என்று ஒதுங்கியிருந்த கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தற்போதைய தலைவர் திரு.த.சிவநாதன் தற்போது

**எழுவான் வேலன்**

எந்த அடிப்படையில் இந்த ஒற்றுமை பேச்சுவார்த்தைகளை நடாத்துகின்றார் என்பதை முதலில் ஊடகங்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். அத்துடன் ஒரே நோக்கத்துடன் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தில் ஆரம்பகாலம் முதல் செயற்பட்டவர்களை தங்களுடைய பதவி ஆசைகளுக்காக ஓரங்கட்டி விட்டு ஒற்றுமை பற்றிப் பேசுவது எவ்விதத்திலும் மனோதர்மம் அல்ல. இவ்வாறானவர்களின் அரசியலும் மக்களை ஏமாற்றி தாங்கள் வாழும் அரசியலேயாகும்.

இது ஒரு புறமிருக்க கடந்தவாரம் ரிஎம்விபியினருக்கும் கிழக்குத் தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற ஒற்றுமை தொடர்பான பேச்சுவார்த்தை வெற்றிகரமான பேச்சுவார்த்தை என்று கூறமுடியாது. இங்கும் இருவரும் நாங்கள் ஒற்றுமைக்காக உழைக்கின்றோம் என்பதை மக்களுக்கு காட்ட வேண்டும் என்பதில் காட்டிய அக்கறையை ஒற்றுமைக்கான அர்ப்பணிப்பிலோ அல்லது எவ்வாறு ஒற்றுமைக்கான பொறிமுறையை கட்டியெழுப்பி அதிலிருந்து செயற்படலாம் என்பது பற்றியோ வெளிப்படத்தவில்லை. யாரை யார் ஆள்தல் என்பதே பெரிதளவுக்கு பேசப்பட்ட விடயமாக இருந்திருக்கின்றது.

தற்போது 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் கூட்டமைப்பு 'பகை முரண்பாடுகளைக் களைந்து அனைவரும் மக்களுக்காக ஒன்றிணைவதை நோக்கமாகக் கொண்டும், ஏற்கெனவே ஏற்படுத்தப் பெற்றுள்ள 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் அரசியல் கூட்டமைப்பை மேலும் செழுமைப்படுத்தி விரிவுபடுத்தும் வகையிலும் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஆர்வமுள்ள பொது அமைப்புகளும் பங்குபற்றும் கலந்துரையாடல் கூட்டமொன்று கிழக்குத் தமிழர் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.' என்ற அறிவிப்புடன் 13.09.2019 அன்று நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளது.

இங்கும் முக்கியமாக ரிஎம்விபியினர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கலாம். கூட்டத்தில் அதன் செயலாளர் அவருடைய வழமையான அரசியல் உரையாடலான 'நாங்கள் இவ்வாறான ஒற்றுமைக்கு நூறு சதவிகிதம் எங்கள் ஆதரவினைத் தெரிவிக்கின்றோம்' என்று கூறி நழுவி விடுவார். கூட்டமைப்பினர் பெருமளவுக்கு கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் இல்லை. யாராவது ஏன் நீங்கள் கலந்து கொள்ளவில்லை என்று அதன் செயலாளரைக் கேட்டால் இவர்கள் எல்லோரையும் மக்கள் புறக்கணித்தவர்கள், கூட்டமைப்பில் வேட்பாளராக நிற்பதற்காக கேட்டவர்கள் இல்லை என்று சொன்னவுடன் கட்சி ஆரம்பித்து கூட்டம் போடுகிறார்கள். எனவே பழமையான பலம் பொருந்திய எங்கள் கட்சி இவர்களுடன் பேசவேண்டுமாக இருந்தால் அதனை மத்திய குழுதான் தீர்மானிக்கும் என்பார்.

13ம் திகதியக் கூட்டத்தில் மக்களால் வளர்க்கப்பட்ட ரிஎன்ஏ, ரிஎம்விபி, ஆகிய இருகட்சிகளும் தங்களுடைய கட்சி அரசியலையும் அதன் ஒரு சில உறுப்பினர்களின் இருப்பையும் பாதுகாப்பதற்கான அரசியலையே எடுப்பார்களே தவிர கிழக்கு மக்களின் அரசியலை அல்ல. அது போன்று கட்சிகளின் ஒற்றுமைக்காக அயராது உழைத்து வருகின்றோம் எனக் கூறிய கிழக்குத் தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகளும் இந்த ஒற்றுமை பலப்படுத்தல் என்கின்ற விடயத்துக்குள் வரப்போவதில்லை. ஏனெனில் இதற்குள் வந்தால் அவர்களின் 'புத்திஜீவி' தலைமைத்துவ ஆசைக்கு என்னவாவது என்கின்ற பயம் அவர்களுக்கிருக்கும்.

எனவே இவ்வாறான கூட்டு முயற்சிகளை ஒவ்வொரு கட்சிகளும் மிகப் பொறுப்புடன் கையிலெடுத்து அதில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் வேண்டும். அதைவிடுத்து இம் முயற்சிகளின் பொறுப்பை விளங்காது தங்கள் கட்சிகளின் கட்சி அரசியலை முன்னெடுப்பவர்களை மக்கள் அடையாளங்கண்டு அவர்களை ஒதுக்குதல் வேண்டும். இல்லாவிட்டால் கிழக்குத் தமிழர்களுக்கு விடிவு கிடையாது.

தொடர்ச்சி...

## வானிலை....

அடுத்த சில நாட்களுக்கு கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகாகக் காணப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.






# கிழக்கு அரசியலும் ஜனாதிபதி தேர்தலும்

தேர்தல் திகதிகள் குறிக்கப்படாவிட்டாலும் அரசியல் கட்சிகள் அடுத்த ஆட்சிக்கான திட்டமிடல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஆனாலும் ஆட்சி அமைப்பதில் காட்டும் ஆர்வம் எந்த அரசியல் கட்சிக்கும் மக்களுக்குரிய (குறிப்பாக சாதாரண மக்களுக்கு) தேவைசார் அரசியல் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றதா என்று அரசியலில் இருப்போரும் சிந்திப்பதில்லை. மக்களும் சிந்திக்கின்றனரா என்றும் தெரியவில்லை.....

தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி தேர்தல் என்றாலே ஏதோ ஒரு அதிசயம் நடந்துவிடாதா என்ற ஏக்கம் ஏமாற்றத்துடனேதான் தொடர்கிறது....

இவ்வாறு இருக்க, கிழக்கில் இன்று வடக்கு கிழக்கு பிரதேசவாதமும் தலைதூக்கியுள்ளது.

அதற்கு மிகப்பிரதான காரணமான சூத்திரதாரிகளாக ததேகூ அரசியல் தலைமைகளின் செயல்பாடுகளும், அந்த கட்சியின் அரசியல் வாழ்கையில் தங்கி வாழும் கிழக்கு அரசியல் பிரதிநிதிகளுமே என்பது இன்று அதிகமாக கருத்திடப்பட்டு வருகின்றது....

அதைச் சரி என்றே வைத்துக்கொண்டாலும், மாற்றுதலைமைகள் உருவாகிட வேண்டும் என்ற கோசங்கள் கிழக்கில் எழுந்தாலும், அதை சரியாக முன்னெடுக்க வேண்டும் என்னும் கரிசனை இன்னும் காட்டப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்....

வீதி அரசியலும் வில்லங்கமான தீர்மானங்களும் எமது எதிர்கால சமுகத்தை இனியும் முன்கொண்டு செல்ல முடியாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

அந்தவகையில் ஜனாதிபதி தேர்தலும், கிழக்கும் தமிழர் அரசியலும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இவர்கள் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், சமுக ஆர்வலர்கள் போன்றோருடன் ஆலோசித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்று வகையில் அவர்கள் விரும்பும் வகையில் முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

அந்த வகையில் பார்க்கும் போது ததேகூ நிச்சயமாக ஐதேக கட்சியையே ஆதரிக்கும் என்பதில் மாற்று கருத்தை எதிர்வுகூற வாய்ப்பில்லை என்றே சொல்லவேண்டும்.

எனவே ததேகூ எதிர்ப்பாளர்கள் எப்படியும் ததேகூ ஆதரிக்கும் கட்சியை எதிர்த்தே அரசியல் செய்கின்றனர்/ இனியும் செய்வார்கள் என்பதில் மாற்றம் தெரியவில்லை....

அந்தவகையில் தமவிபு கட்சி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றாலும், அவர்களின் ஆதரவாளர்கள் மகிந்த தரப்புக்கு ஆதரவு என்பதை சமிக்ஞை செய்வதை அவதானிக்க முடிகின்றது......

அதேவேளை கிழக்கில் உள்ள பா.உ வியாழேந்திரன் அவர்களின் தலைமையிலான தமிழர் முற்போக்கு கட்சி கடந்த அரசியல் குழப்பத்தின் போது ஐதேக கட்சிக்கு எதிராக அமைந்த ஆட்சியில் அமைச்சை பெற்றவர் என்ற வகையிலும், ஐதேக கட்சியில் இணைய வாய்ப்பு இல்லை.... அதேவேளை அவரின் ஆதரவு மைத்திரி சார்ந்து இருந்ததை சில இடங்களில் காண முடிந்தது....

அந்த வகையில் அவர் யாரை ஆதரிப்பார்

**கே.என்.இராசையா**

என்பதை இப்போதைய நிலையில் ஊகிக்க முடிந்தாலும், அவர் தனது நிலைப்பாட்டை இதுவரை வெளியில் வெளிப்படையாக கூறியது இல்லை....

அவ்வாறே கிழக்கு தமிழர் ஒன்றியம்/ கூட்டணி என்ன செய்கின்றது என்பதை இன்னும் மக்கள் அவையில் வெளிப்படுத்தவில்லை, ஆனால் ததேகூ கட்சியை ஓரம் கட்டி, கிழக்கில் இருக்கின்ற தமிழ் கட்சிகளை ஒன்று சேர்ப்பதாக சமுக வலைத்தளத்தில் பரப்புரை செய்வதை அறிய முடிகின்றது.

எனவே இவர்களும் ததேகூ மீதான எதிர்ப்பின்பால் உட்பட்டு ஐதேக மீதான விமர்சன பார்வையுடனையே காணப்படுகின்றனர்.

எனவே இவர்கள் தெரிவும் எதுவாக இருக்கும் என்பதை அரசியல் ஆர்வலர்கள் உணர்வார்கள் என்றே தோன்றுகிறது.

அவ்வாறே ஏனைய சிறு சிறு குழுக்களும், அரசியல்வாதிகளும் ததேகூ கட்சியை பிரதான விமர்சனப் பொருளாகக் கொண்டு அரசியல் செய்வதையே கொள்கையாக கொண்டு செயல்படுகின்றர்.

எனவே ததேகூ கூட்டுச்சேரும் கூட்டணியில் சேர வாய்ப்பே இல்லை. அவர்களும் சேர்ந்து செயல்படவிடுவார்கள் என்றும் சொல்ல முடியாது.
எனவே இவர்களின் அடுத்த தெரிவு மகிந்த தரப்பாகவே இருக்கும், அல்லது அனுர தலைமையிலான மக்கள் விடுதலை முன்னனியாக இருக்க வேண்டும்.

சிலவேளை ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வெளிப்படையாக எதுவும் சொல்லாமல் நழுவி செல்வர் மாகாண சபை தேர்தலை இலக்கு வைத்ததாக என்றும் சிந்திக்க வைக்கின்றது.

ஆனால் அவ்வாறு செய்வது பொருத்தமாக அமையாது. கிழக்கு தமிழர் அரசியல் இருப்பை இதில் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டியது காலத்தின் கடமையாகும்.

எனவே அபிவிருத்தி அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று சொல்லும் இக்கட்சிகள் இத்தேர்தலை தவற விட்டிடக்கூடாது அல்லவா.....

ஏனெனில் சிறுபான்மை மக்களே இத்தேர்தலை தீர்மானிக்கும் சக்தி என்பது கடந்த கால வரலாறு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே தமிழர் பிரதிநிதிகள் இதை சாதகமாக பயன்படுத்தி கொண்டாலே எதிர்காலத்தில் கிழக்கு தமிழர் இருப்பை மட்டுமல்லாமல், அபிவிருத்தி, அதிகாரம் என பலவற்றை பெற முடியும்.

அதைவிடுத்து, கட்சி அரசியல் செய்ய நினைத்தால் நீங்கள் ஒதுக்கப்படுவது மாத்திரமன்றி தமிழ் மக்களும் எதிர்காலத்தில் அரசியல் செய்ய கிழக்கில் பெரும்பான்மை அற்ற அல்லது அதிகார ரீதியாகவோ ஒடுக்கப்பட்ட சமூகமாக மாறிவிடும்.

அல்லது விரக்தி நிலையில் மக்கள் எதிர்கால தேர்தல்களை புறக்கணிக்கும் நிலையும் உருவாகலாம். ஏனெனில் இன்று எமது இளையோர் மட்டுமல்லாமல் தமிழ் சமுகமே விரக்தி கலந்த கோபத்துடன் இருக்கின்றதை சில இடங்களில் நிரூபித்து வருவதோடு, அதில் அரசியல் குளிர் காய்தலும் இருக்கவே செய்கின்றது.அது நாளை உங்கள் பக்கம் திரும்பவும் வாய்ப்பு உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அவ்வாறு உள்ள மக்களுக்கு எந்த வழியிலாவது நன்மைகள் அல்லது தீர்வுகள் கிடைக்காதா என்ற ஏக்கத்தில் இருக்கின்ற நிலையில் மாற்று தலைமைகள் என அரசியல் செய்வோர் இதில் சாதூரியமாக செயல்பட வேண்டும்.

தமது சொந்த அரசியல் நோக்கம் கொண்டு அரசியல் ஆதரவுகளை வழங்காது, கிழக்கின் அடிப்படை விடயங்களை ஆராய்ந்து அவற்றை கோரிக்கைகளாக முன்வைத்து நிபந்தனையின் அடிப்படையில் தமது ஆதரவை வழங்க போகின்ற ஜனாதிபதி வேட்பாளருக்கு/ கட்சிக்கு ஆதரவு கொடுப்பதுதானே முறையாக அமையும்.

அவ்வாறு இல்லையெனில் ஏன் நீங்கள் தமிழர் சார் அரசியல் கட்சிகளை உருவாக்க வேண்டும். அதற்கு பதிலாக அந்த தேசிய கட்சிகளில் சேர்ந்து உங்கள் சொந்த அரசியல் பயணத்தை செய்யலாம் அல்லவா? அதை விடுத்து தமிழரை ஏமாற்றும் தமிழ் தேசியம் சார் அரசியல் கட்சிகள் என அடையாளம் காட்டி மக்களை ஏமாற்றும் அரசியல் நல்லதாக அமையாது.

ததேகூ எதுவித எழுத்து மூல நிபந்தனையும் இன்றி ஆதரவு வழங்கி ஐதேக வுக்கு முட்டுக்கொடுப்பதாக விமர்சிக்கும் நீங்களும் அதேமுறையில் முட்டுக்கொடுக்க/ கொடுப்பது நியாயமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் நிலவுவதை இவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பணம்/ பிண அரசியலை விடுத்து எமது கிழக்கு மக்களின் தேவை சார் கோரிக்கைகளை முன்வைத்து ஆதரவை கொடுத்து அதனை நிறைவேற்றி அடுத்த கட்ட தேர்தல்களுக்கு தயாராக வேண்டும்.

அவ்வாறு இல்லாமால் மேடை அரசியலால் அல்லது கறுப்பு சட்டை அரசியலால் மாற்றுத் தலைமைகளை உருவாக்க முடியாது.

அதற்காக கிழக்கில் தலைமைகளை உருவாக்கும் நோக்கம் கொண்ட கட்சிகள் எதுவும் செய்யவில்லை என்று கருத்தல்ல, நீங்களும் ததேகூ வழியில்தானே செல்கின்றீர்கள் என்பதையேதான் மக்கள் சிந்திப்பார்கள் அல்லவா...

அதைவிட ததேகூ க்கு ஓர் உணர்வு பூர்வமான ஆதரவு சக்தி இருப்பதை பலரும் உணராமல் இருக்க வாய்ப்பில்லை....

அதை வைத்துதான் ததேகூ அரசியல் செய்வதையும் மக்கள் ஓரளவு உணர்ந்து இருந்தாலும், அவர்கள் செய்யாததையா நீங்கள் செய்து விட்டீர்கள்/ செய்ய போகின்றனர் என்று சிந்திக்கவும் வாய்ப்பு உண்டு அல்லவா..

அதைவிட உங்கள் மீது நம்பிக்கை இலகுவில் வந்துவிடும் என்பதும் கடினம். இதற்கு மலையக அரசியலும் சிறந்த எடுத்துக்காட்டு என்பதை உணர வேண்டும் கிழக்கு அரசியல்வாதிகள்.

எனவே சிந்தித்து செயல்படுவதாக நினைத்து உங்கள் சுய அரசியலை முன்னெடுத்தால் நிச்சயமாக நீங்கள் தோல்வியே சந்திக்கவேண்டி ஏற்படும்.

முன்னைய சமுகம் போல இன்றும் இருக்கும் என்றும் சொல்லிவிட முடியாது.

எனவே ததேகூ ஐதேக கட்சியை ஆதரிக்கட்டும், நீங்கள் அதற்கு எதிரான அரசியலை முன்னெடுப்பதில் தவறு காணவில்லை. இனி வரும் காலங்களில் எந்த ஆட்சி வந்தாலும் கிழக்கில் தமிழர் கைகளும் அவ்வாட்சியில் ஓங்க வேண்டும் என சிந்தித்து செயல்பட வேண்டும்.

# ஐ. தே. க வின் வரலாற்றில் தமிழரின் வகிபாகம்

கடந்த செப்ரெம்பர் ஆறாம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி தனது 73 ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது.

ஐ. தே. கட்சியில், தமிழரின் பங்களிப்பு இன்று குறிப்பிடத் தகுந்தது.

செனட்டர் எஸ்.நடேசன்( நடேசபிள்ளை)

சட்டவாதியான நடேசபிள்ளை ஆரம்பத்தில் பிரித்தானிய சட்டசபையின் யாழ்ப்பாண உறுப்பினராக இருந்தவர். பின்னர் செனற் சபையில் உறுப்பினராக்கப்பட்டு, செனட்டர் சுப்பையா நடேசன் ஆனார்.

சட்டசபை, நாடாளுமன்றம், மேல்சபை ஆகியவற்றில் உறுப்பினராக இருந்த பெருமைக்குரியவர். இவர் 1946 இல் ஐ. தே. க ஆரம்பிக்கப்பட்ட போது அதன் யாப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்கு ஆற்றியவர்.

1947 இல் தலைவர் செல்வநாயகத்தை எதிர்த்து காங்கேசன்துறையில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவர்.

சேர். பொன. இராமநாதனின் மருமகனான இவர் தமிழ் மொழிக்கு அரும் பணியாற்றியவர். தஞ்சாவூர் இவரது பூர்வீகம். இவரது இயற்பெயர் நாகநாதன் என்பதாகும். முத்துத்தீட்சத பரமஹம்சர் என்பவரிடம் ஆன்மீகக் கல்வியைப் பயின்று தரிசனத்திரயம் என்ற நூலை எழுதியுள்ளார். இளம் வயதில் சட்டப்பட்டதாரியாகி நகராண்மைக்கழக உறுப்பினரானார்.

சேர்கள். பொன். இராமநாதன், பொன் அருணாசலம் ஆகியோர் தமிழகம் சென்ற வேளையில் இவர் அறிமுகமாகி, 1923 இல் இலங்கை வந்து பரமேஸ்வராக் கல்லூரியின் (இன்றைய யாழ் பல்கலைக் கழகத்தின்) ஆசிரியராக, பின் அதன் அதிபருமானார். இராமநாதன் அவர்களே அவருக்கு நடேசன் எனும் பெயரை வைத்தாராம். 1926 இல் சேர். பொன். இராமநாதனின் புதல்வியாரைத் திருமணம் செய்துகொண்டார்.

1934 இல் அரசாங்க சட்டசபையில் பிரதிநிதியாக நியமனம் பெற்று 1946 இல் ஐ. தே. கட்சி உருவானபோது அதன் உறுப்பினராகி, ஆலோசகராக அதன் யாப்பு அமைப்பதிலும் முக்கிய வகிபாகத்தை வகித்தார்.

யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் திறக்கப்படவேண்டும் என ஆர்வமாக இருந்தவர்.
தபால், தந்தி, ஒலிபரப்பு அமைச்சர் பதவியை டி. எஸ் இவருக்கு வழங்கினார். அக்காலத்தில் இது முக்கிய அமைச்சர் பதவியாகும். எனினும், 1956 இல் பண்டா கொண்டு வந்த தனிச்சிங்களச் சட்டத்திற்கு தமது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தெரிவித்தமையால், பதவியை இராஜினாமாச் செய்து ஐ. தே. க விலிருந்து விலகினார்.

இவர் இராஜினாமாச் செய்தபோது கண்ணீர் விட்டழுதார் எனவும் ஐ. தே. க. வில் தமிழர் ஏமாற்றப்பட்டுவிட்டனர், தமிழருக்கு ஐ. தே. க. வும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றே என அவர் தெரிவித்ததாகவும் தகவல்கள் வந்துள்ளன.

1960 வரை சிறிமாவின் அரசில் செனட்டராக இருந்தார். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை காட்டியமையாலேயே இவர் சிறிமா அரசிலும் செனட்டர் பதவி முடியும் வரை இருந்ததாக அரசியல் ஆசிரியர்கள் கூறியதுண்டு.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் முதலாவது துரோகி என அழைக்கப்பட்டவர் இவர் என பெரியார் க. சி குலரத்தினம் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார் (ஈழநாடு).

சகுந்தலை காவியம் (334 செய்யுள்கள்), கதிர்காமநாதன் காவியம் போன்ற நூல்களை இயற்றிய இவர் சென்னையில் இடம்பெற்ற தமிழ்ச் சங்க கருத்தரங்குகள் பலவற்றில் தலைமைதாங்கி, பங்குபற்றி தமிழ்மொழிக்கு நற்சேவையாற்றியுள்ளார். சிதம்பரம் சைவசித்தாந்த சமாஜ பொன்விழா, மதுரைத் தமிழ்ச்சங்க நான்காவது மாநாடு என்பவற்றுக்கு தலைமை வகித்துள்ளார்.

1950 களில் தமிழரசுக்கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன் வைத்தபோது இவர் தந்தை செல்வாவைத் தோற்கடித்தார் என்பதும் குறிக்கத்தக்கது

செனட்டர் எம் திருச்செல்வம்.

சட்ட அறிஞரான முருகேசு திருச்செல்வம்

**எஸ்.எம். வரதராஜன்**

1960 இல் டட்லி அரசை தமிழரசுக்கட்சி ஆதரித்தபோது உள்ளூராட்சி அமைச்சர் பதவியை ஏற்றவர். கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் அமைச்சர் பதவியை ஏற்க முன்வராததால், இவருக்கு செனட்டர் பதவி வழங்கப்பட்டு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

1956 இல் சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து இடம்பெற்ற அகிம்சைப் போராட்டங்களில் கைதாகி சிறை சென்றவர்.

1960 இல் இவர் அமைச்சராகவிருந்த காலத்தில் திருகோணமலை கோணேஸ்வர ஆலயப் பிரதேசத்தை புனிதப் பிரதேசமாக பிரகடனம் செய்ய முயன்றவேளை பிரதமர் டட்லி அதனை அனுமதிக்காமையால், தமது மந்திரி பதவியை இராஜினாமாச் செய்தார்.

ஐ. தே. க. வில் திருச்செல்வத்தின் வகிபாகம்

பொதுவாக ஐ. தே. க ஆட்சிக்கு வரும்போது டட்லிதான் பிரதமர் பதவியை எடுப்பது வழக்கம். அது தோற்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஜே. ஆருக்கு வழங்கப்படும்.

ஜே. ஆருக்கும் டட்லிக்கும் முரண்நிலை இருந்தது.ஜே. ஆரை கட்சியிலிருந்து அகற்றும் நடவடிக்கை நீதிவிசாரணை வரை சென்றது.

அவ்வேளை, ஜே ஆருக்காக வாதாடி ஜே. ஆரைக் காப்பாற்றியவர் அரசியல் அறிஞரான எம். திருச்செல்வம் அவர்கள்.

சந்திரிகா-நீலன்-அஷ்ரப் அரசியற் தீர்வுத் திட்டத்தை ஆக்குவதில் முக்கிய பாகம் வகித்த கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் தந்தைதான் இவர்.

தமிழரசுக் கட்சியின் தளபதி எனப் போற்றப்பெற்ற தலைவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் புதல்வரான அமிர்தலிங்கம் பகீரதன் அமரர் திருச்செல்வம் பற்றி பகிர்ந்துள்ள குறிப்பு



ஒன்று பின்வருமாறு:-

'.. எமது மதிப்பிற்குரிய திரு மு. திருச்செல்வம் அவர்கள் அமைச்சராக இருந்த காலம் 1965 ல் ஐ.தே.க. மந்திரி சபையில் தான். அப்பொழுது தான் திரு டட்லி செனநாயக்கா அவர்களின் தலைமையில் அமைந்த அரசுக்கு அன்றைய தமிழரசு கட்சி தனது ஆதரவை வழங்கியது. இந்த காலத்தில் தான் டட்லி-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டது. தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மந்திரி பதவி எடுக்க கூடாது என்ற காரணத்தினால் திரு திருச்செல்வம் அவர்கள் மேல் சபையினூடா அமைச்சரானார். மிகவும் சக்தி வாய்ந்த உள்துறை அமைச்சுக்கு மந்திரியாக கடமையாற்றினார். மிகச்சிறந்த நாணயமிக்க ஒரு தமிழர் தலைவர். அவருடைய புதல்வர் திரு நீலன் திருச்செல்வத்துடன் பழகி பார்த்தாலே அவர் தந்தையின் குணங்களைக் அறிய முடியும். டட்லி செல்வா ஒப்பந்தம் நடைபெறாமல் முடிவுக்கு வந்து தமிழரசு கட்சி அரசிலிருந்து வெளியேறியபோது தந்தை செல்வாவின் ஆலோசனையின் பேரில் திரு திருச்செல்வம் அவர்கள் அமைச்சராக தொடர்ந்தார். பின்னர் திருகோணமலையை புனித நகரமாக பிரகடனம் செய்ய முடியாமல் தோல்வி உற்ற நிலையில் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அவர் அமைச்சராக இருந்த போது யாழ்ப்பாணம் வரும் போது காங்கேசன்துறை துறைமுக அரச விடுதியில் தங்குவார்.

எனது தந்தையும் அவரை சந்திக்கும் போதெல்லாம் பல மணிநேரங்கள் உரையாடுவார்கள். எனது தந்தையுடன் விடுமுறை காலத்தில் செல்லும் எனது சகோதரரும் நானும் அந்த விடுதியை ஒட்டியிருந்த புல் வெளியில் எமது நேரத்தை விளையாடிக் களிப்போம்.

அமைச்சர் அவர்கள் ஆங்கிலேயருக்கு நிகராக மிக வெளிர் நிறம் கொண்டவர். கம்பீரமான அன்பான மனிதர். நினைத்து பார்க்கிறேன். பகிர்கிறேன்.'

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே. ஆரின் அரசியற்பாதை அன்று இப்படி மாற்றப்படாதிருந்தால், டட்லியின் மறைவுக்குப் பிறகு ஐக்கிய தேசியக் கட்சி ஜே. ஆரும் இல்லாமல் தலைவனில்லாத கப்பலாகத் தத்தளித்திருக்கும் என்று விமர்சிக்கப்பட்டது. .

1970 தேர்தலில் வென்ற 17 பாராளுமன்ற உறுப்பினர்களுடனிருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1977 பொதுத் தேர்தலில் ஜே. ஆர். தலைமையில் 91 சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை 8 ஆக்கி 140 உறுப்பினர்களுடன் வெற்றி கொண்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மையான அமோக வெற்றியுடன் மீள எழுந்தது.

தமிழ்த் தலைமைகள் டட்லி-செல்வா ஒப்பந்தம் தோல்வியடைந்த நிலையில் ஜே ஆர் வருகை தமிழ்மக்களுக்கு பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுக்கும் என நம்பியதில் ஆச்சரியமில்லை.

டட்லியுடன் இடம்பெற்ற முரண்பாடுகள், ஒப்பந்தத் தோல்விகளே திருச்செல்வம் ஜே. ஆரின் உட்கட்சி விவகாரத்தில் உதவியதாக அப்போது விமர்சிக்கப்பட்டது.

ஜே. ஆருக்கும் திருச்செல்வம் அவர்களுக்கும் இடையில் ஒரு நட்புறவு இருந்தது. அது நீலன் வரை தொடர்ந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துக் கொழும்பிலும் மலையகத்திலும் போட்டியிட்டபோதிலும், அது அத் தேர்தலின்போது, ஐ. தே. க. வுடன் நட்பாகவே செயற்பட்டது.



இதேவேளை, வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிட்ட தமிழர் கூட்டணி, தனது கூட்டங்களில், 'கிழக்கில் சூரியன் உதிக்க மேற்கில் சேவல் கூவும்' எனப் பிரசாரம் செய்து பேசினர்.

உதயசூரியன் கூட்டணியினதும், சேவல் தொண்டமானின் இ தொ க வினதும் சின்னமாகும்.

1977 இல் ஜே. ஆர் அமோக வெற்றியுடன் 3 இல் 2 பெரும்பான்மையுடன் வந்தபோதிலும், அவர் தமிழ்த்தலைமைகளுக்குச் சொன்னதுபோல தீர்வைத் தரவில்லை.

அரசியலமைப்பில் 6 வது திருத்தத்தைக் கொண்டு வந்து தன் மீது நம்பிக்கை வைத்த தமிழ்த் தலைமைகளுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்து அவர்களை பாராளுமன்றத்திலிருந்தே வெளியேற்றினார்.

அவர் நாட்டினதும் மட்டுமன்றி தமிழர்களின் தலைவிதியையும் மாற்றினார்.

## கல்முனை தமிழ் பிரதேச வீதிகளின் அவலநிலை!




---காரைதீவு நிருபர் சகா--

கல்முனை தமிழ் பிரதேசங்களின் பெரும்பாலான வீதிகள் குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு பொருத்தமற்றதாக மாறிவருவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கல்முனையின் இதயம் எனக்கூறப்படும் பகுதியிலுள்ள உடையார் வீதி, வட்டைவிதானை வீதி உள்ளிட்ட பல வீதிகள் மிகமோசமான நிலையிலுள்ளன.

நீண்டகாலமாகச் செப்பனிப்படாத காரணத்தினால் இவ்வீதிகள் மழைகாலத்தில் அறவே போக்குவரத்துச் செய்யமுடியாத துர்ப்பாக்கியநிலை நிலவுகிறது. பாடசாலை மாணவர்கள் சப்பாத்து அணிந்து செல்ல முடியாதநிலை.

மாநகரப் பகுதிக்குள்ளேயே இந்த துரதிஸ்ட நிலைமையா? எனக் கேட்கக்கூடும். உண்மை அதுதான்.
இவ்வீதிகளில்தான் கல்முனை மாநகரசபையின் சிலதமிழ் உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்களும் வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை பாண்டிருப்பு பெரியநீலாவணையிலுள்ள பல வீதிகள் இதே நிலையிலுள்ளன.
இது கல்முனை மாநகரசபையின் கவனத்திற்கு.



## காரைதீவு- மண்டூர் பாதயாத்திரை



--காரைதீவு நிருபர் சகா---

வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டூர் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தையொட்டி காரைதீலிருந்து சனிக்கிழமை மண்டூருக்கு பாதயாத்திரை இடைபெற்றது.

சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட காரைதீவு பக்தர்கள் கலந்துகொண்ட இப்பாதயாத்திரையை காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து விசேடபூஜையுடன் பாதயாத்திரை ஆரம்பமானது.

10 அலங்கரிக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் முன்னேவர பஜனை சகிதம் பக்தர்கள் யாத்திரையில் ஈடுபட்டனர். முதியோர் ஆண்பெண் இளைஞர்யுவதிகள் குழந்தைகள் என பலதிறத்தினரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





# விளையாட்டு

## பீ்.்பா உலகக் கிண்ண தகுதிகான் போட்டியில் போராடி தோல்வியடைந்தது இலங்கை அணி



எதிர்வரும் 2022-ம் ஆண்டு கட்டாரில் இடம்பெறவுள்ள பிஃபா உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கான தகுதிகாண் சுற்றில் வட கொரியா அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி கடுமையான போராட்டத்தின் பின் 1-0 என்ற கோல் கணக்கில் போராடி தோல்வியடைந்தது.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதல் இலங்கை வீரர்கள் பலம் மிக்க வட கொரிய வீரர்களுடன் சரி சமமாக கடுமையாக மோதினர்.

கொரிய வீரர்கள் ஏற்படுத்திய கோலுக்கான வாய்ப்புகள் பலவற்றை கோல் காப்பாளர் சுஜான் பெரேரா தனது அனுபவத்தைக் கொண்டு சாதுர்யமாகத் தடுத்தார்.

அதேபோன்று, இலங்கை பின்கள வீரர்களும் கொரிய வீரர்களின் அனைத்து முயற்சிகளையும் தடுக்க, முதல் பாதி கோல்கள் ஏதும் இன்றி நிறைவுபெற்றது.

போட்டியின் 67ஆவது நிமிடத்தில் இலங்கை அணியின் கோல் எல்லையில் இடது புறத்தில் இருந்து உயர்ந்து வந்த பந்தினை கொரிய வீரர் ஜாங் சுக் சோல் கம்பங்களுக்குள் ஹெடர் செய்து போட்டியின் முதல் கோலைப் பதிவு செய்தார்.

அதன் பின்னர் இரண்டு அணிகளும் எதுவித கோல்களும் போடாததால் போட்டியில் வட கொரிய அணி 1 – 0 என வெற்றி பெற்றது.

## லசித் மாலிங்கவின் சாதனையுடன் ஆறுதல் வெற்றியினை பெற்றது இலங்கை அணி



நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது சர்வதேச இருபதுக்கு 20 போட்டியில் இலங்கை அணி மாலிங்கவின் சாதனையுடன் ஆறுதல் வெற்றியினை பெற்றுக்கொண்டது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தடுமாற்றமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.
இலங்கை அணியில் தனுஷ்க குணதிலக்க (30) நிரோஷன் டிக்வெல்ல (24) ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் சுழல் பந்துவீச்சாளர்களான மிச்சல் சென்ட்னர் மற்றும் டொட் எஸ்ட்ல் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளை அதிகபட்சமாக வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி லசித் மாலிங்கவின் சாதனை பந்துவீச்சு காரணமாக 88 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியை தழுவியது.

ஆரம்பத்தில் நியூசிலாந்து அணி வேகமாக ஓட்டங்களைக் குவிக்க தொடங்கியிருந்தாலும், லசித் மாலிங்க தன்னுடைய இரண்டாவது ஓவரில் அடுத்தடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அணிக்கு சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்தார்.
இறுதியில் லசித் மாலிங்க 6 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்த நியூசிலாந்து அணி 88 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

ஆப்கானிஸ்தான் அணியின் ரஷீட் கானுக்கு அடுத்தபடியாக T20 போட்டிகளில் அடுத்தடுத்து நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றியவர் என்ற சாதனையை மாலிங்க பதிவுசெய்ததுடன் T20 போட்டிகளில் 100 விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

எனினும் இந்தப் போட்டியில் தோல்வியடைந்த போதிலும் நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட T20 தொடரை 2-1 என கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## கல்லடிவேலூர் விபுலானந்தா கழகம் வெற்றி



மட்டக்களப்பு லைற்ஹவுஸ் விளையாட்டு கழகம் 08.09.2019 அன்று நடாத்திய 18 வயதிற்குட்பட்டோருக்கான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கல்லடிவேலூர் விபுலானந்தா விளையாட்டு கழகம் வெற்றி பெற்று, கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.
அமரர் சீனித்தம்பி தம்பிராசா ஞாபகார்த்தமாக நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் இறுதி போட்டியில் கல்லடிவேலூர் விபுலானந்தா விளையாட்டு கழகமும் லைற்ஹவுஸ் விளையாட்டு கழகமும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் தலா ஒரு கோலினை இட்டதன் மூலம் தண்டனை உதை வழங்கப்பட்டது. இதில் விபுலானந்தா விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவருமான மா.உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார்.

**யாசீர் அரபாத்**

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன் மற்றும் லைற்ஹவுஸ் விளையாட்டு கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். பரிசளிப்பு நிகழ்வை தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## பாகிஸ்தானில் விளையாட இலங்கை வீரர்கள் மறுப்பதற்கு இந்தியா காரணமா?

பாகிஸ்தானில் விளையாடவுள்ள கிரிக்கெட் தொடரை இலங்கை கிரிக்கெட் அணியின் சில வீரர்கள் தவிர்த்ததன் பின்னணியில் இந்தியாவின் தலையீடு இருந்ததாக வெளியான செய்தியை இலங்கை அரசு மறுத்துள்ளது.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தனது ட்விட்டர் பக்கத்தில் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் செல்ல இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மறுப்பு தெரிவித்ததற்கு இந்தியாவின் தலையீடு உள்ளதாக வெளியாகியுள்ள தகவலில் உண்மை கிடையாது என அவர் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியை இலக்கு வைத்து பாகிஸ்தானில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தீர்மானத்தை எட்டியுள்ள கிரிக்கெட் வீரர்களின் தீர்மானத்தை தாம் மதிப்பதாக கூறியுள்ள அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, பாகிஸ்தானுக்கு செல்ல விரும்பும் வீரர்களை தேர்வு செய்து அனுப்பும் பணியில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.
இலங்கையிடம் பலம் பொருந்திய அணியொன்று உள்ளதாகவும், பாகிஸ்தான் அணியை பாகிஸ்தான் மண்ணில் வைத்து வீழ்த்துவதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளும், மூன்று டி20 கிரிக்கெட் போட்டிகளும் பாகிஸ்தானில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி முதல் எதிர்வரும் அக்டோபர் மாதம் 9ஆம் தேதி வரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.


எனினும், இலங்கை கிரிக்கெட் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 வீரர்கள் பாகிஸ்தான் விஜயத்தை நிராகரித்திருந்தனர்.

பாகிஸ்தானில் காணப்படுகின்ற பாதுகாப்பு பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்திருந்தது.

நிரோஷன், குசல் ஜனித் பெரேரா, தனஞ்ஜய டி சில்வா, திஸர பெரேரா, அகில தனஞ்ஜய, லசித் மலிங்கா, எஞ்சலோ மாத்யூஸ், சுரங்க லக்மால், தினேஷ் சந்திமால் மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோரே இந்த தீர்மானத்தை எட்டியுள்ளனர்.

--- நன்றி பிபிசி

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் 4-வது முறையாக சம்பியனானார் நடால்



அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர வீரர் ரபேல் நடால் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனில் மெத்வதேவை 7-5, 6-3, 5-7, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் நடால் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.
இதன்மூலம் 19-வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை நடால் கைப்பற்றியுள்ளதோடு அமெரிக்க ஓபனில் 4-வது முறையாகவும் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். மேலும் இன்னும் ஒரு கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றால் ரோஜர் பெடரின் உலக சாதனையை (20 கிராண்ட்ஸ்லாம்) சமன் செய்வார்.
தற்போது 20 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களுடன் பெடரர் முதலிடத்தில் உள்ளார். 16 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் நோவக் ஜோகோவிச் 3வது இடத்திலும், 14 பட்டங்களுடன் பீட் சாம்ப்ராஸ் 4வது இடத்திலும் உள்ளனர்.

# இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தமிழ் இலங்கைக் கலைஞர்களுக்கான விருது விழா



இந்து கலசார அலுவல்கள் திணைக்களம் இம்மாதம் இரண்டாம் திகதி, ஈழத்துக் கலைஞர்கள் 222 பேரைத் தெரிந்து, அவர்களுக்கு விருதும் பணமும் அளித்துக் கௌரவித்தது.

"நிலும் பொக்குன" என அழைக்கப்படும் தாமரைத் தடாக மண்டபத்தில் வருடம் தோறும் சிங்களக் கலைஞர்களை அரசின் கலாசார அமைச்சு இவ்வாறு கௌரவிப்பது வழமை. அதற்குப் பெரும் பணம் செலவாவதும் உண்டு.

அதேபோல, இம்முறை இத்தகையதோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளார் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன்.

மனோ கணேசன் நான் உங்கள் தோழன் சினிமா நாயகன் வி.பி.கணேசனின் மகன். ஒரு கலைஞரின் மகன்.

தமிழ் இலங்கையர் என அவர் கலைஞர்களை விழித்ததும்

ஈழத்துக்கலைகள் தனித்துவமுடையவை அவை வளர்க்கப்பட வேண்டும் எனக் கூறியதும் தமிழ் இலங்கையர்க்கு ஒரு தனித்துவமான கலைப் பாரம்பரியம் உண்டு என அவர் அழுத்தியதும் கோடம்பாக்கக் கலைஞர்க்கு அளிக்கும் பணத்தை இலங்கைத் தமிழ்க் கலைஞர்க்குக் கொடுங்கள் என அவர் புலம்பெயர் தமிழர்களை வேண்டிக் கொண்டதும் நிகழ்வு முழுவதும் ஈழத்துத் சினிமா, ஈழத்து மெல்லிசைப் பாடல்களை நிகழ்த்தியதும் அழைத்திருந்த கலைஞர்கள் ஏறத்தாழ அனைவரும் கலந்துகொண்டமையும் இவ்விழாவின் நல்ல அம்சங்களாக எனக்குத் தெரிந்தன.

222 கலைஞர்களை விருதுக்குத் தெரிந்து, அழைத்திருந்தனர். நடனம், இசை, நாடகம், கூத்து, கிராமியக்கலை, வானொலி ஒலிபரப்பு, பத்திரிகை, இலக்கியம், சினிமா, ஓவியம் என பல தரப்பட்ட துறைகளிலும் பங்காற்றியவர்களுக்கு இவ்விருது அளிக்கப்பட்டது.

விருதளிப்பு விழா தொடங்கு முன் இத்துறையில் பங்காற்றிய மறைந்த கலைஞர்கள் பற்றிய விபரணப்படம் ஒன்றும் காட்டப்பட்டது. பழம் கலைஞர்களை நினைவு கூர்ந்தமை ஓர் நல்ல அம்சம்.

விருதுக்குரிய கலைஞர்களை அவர்கள் வயதின் படி பிரித்திருந்தனர்.

முதல் தொகுதி 70 வயதுக்கு மேற்பட்டோர்; இரண்டாம் தொகுதி 60-70 வயதுக்குட்பட்டோர்; மூன்றாம் தொகுதி 40-60 வயதுக்குட்பட்டோர்;

நான்காம் தொகுதி 40 வயதுக்குக் குறைந்த இளம் கலைஞர்கள்.

## பேராசிரியர் சி. மௌனகுரு

70 வயதுக்கு மேற்பட்ட முதிர்ந்த அல்லது முதுமையான கலைஞர்களை திணைக்களமே தெரிவு செய்திருந்தது என நினைக்கிறேன். ஏனையோரை விண்ணப்பம் மூலம் தெரிவு செய்திருந்தனர் எனவும் அறிகிறேன்.

70 வயதுக்கு மேற்பட்டோருக்கு "கலையரசு" விருதும் அதற்கு அடுத்த தொகுதிக்கு "கலைமாமணி" விருதும் அதற்கு அடுத்த தொகுதிக்கு "கலைச்சுடர்" விருதும் அடுத்த தொகுதியினருக்கு "கலை இளவரசு" விருதும் அளிக்கப்பட்டன.

70 வயதுக்கு மேற்பட்டோருள் வாழ்நாள் முழுவதும் தம் துறையில் நீண்டகாலமாக ஈடுபட்ட இற்றைவரை ஈடுபட்டுகொண்டிருக்கின்ற

12 பேரைத் தெரிந்திருந்தனர்.

அவர்கள், தெளிவத்தை ஜோசப் (இலக்கியம்), வேல் ஆனந்தன் (நடனம்), டொமினிக் ஜீவா,( இலக்கியம், பத்திரிகை), கண்ணன் (இசை), ஜோக்கிம் பெர்னாண்டோ ( வானொலி நாடகம்), செல்வராஜா ( இசை), அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் ( இசை, நாட்டியநாடகம்), ஜின்னாசெரிபுடீன் (கவிதை), நடராஜ சிவம் (ஒலிபரப்பு),

எம் எச் அப்துல்ஹமீட் (வானொலி ஒலிபரப்பு), மௌனகுரு (நாடகம், கூத்து, நாடக ஆய்வு) ஆவர்.

ஏறத்தாழ இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து அழைக்கப்பட்ட 222 கலைஞர்களில் 98 வீதமானோர் வந்திருந்தனர்.

சகோதர சிங்களக் கலைஞர்கள் அரச மட்டத்தால் பல வகைகளில் கௌரவிக்கப்படுகிறார்கள். அச்சமயம் முகமறியாச் சிங்களக் கலைஞர்கள் அனைவரும் அங்கு கூடுகின்றனர், முகம் பார்க்கின்றனர், அறிமுகமாகின்றனர், உரையாடுகின்றனர் சிந்தை மகிழ்கின்றனர். அவற்றை ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்றன.

2.9.2019 அன்று "நிலும் பொக்குன" எனும் தாமரைத் தடாகத்தில் இத்தகையதொரு

தொடர்ச்சி பக்கம்..15

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-17*

## கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா



பேச்சுத் துறையில் இராஜதுரை

தென்னிந்தியாவில் வானரங்களின் தலைவனான அனுமார் ஸ்ரீ இராமனுக்கு உதவி செய்ததாக இராமாயணம் கூறுகிறது. உண்மையை உரைக்குமிடத்து இராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் (ஆரியர்) திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிக் கூறுகின்றதென்று கூறாலாம். திராவிடர்களில் ஒரு வகுப்பாரை வானர்கள் என்று அழைத்தார்கள். (ஜவஹர் கடிதம்31 பக்கம்177)

ஒருகாலத்தில் இராவணனைத் தூற்றிய வாய்கள் இன்று வஞ்சக விபூஷணனின் அண்ணனென்று தன்னை வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும் நெஞ்சகனை நல்யாழின் நரம்புதனைத் தடவி நிறைய இசைச் செவியமுது தரும் புலவன் தன்னை வெஞ்சமரில் சாதல் வர நேர்ந்திடினும் சூழ்ச்சி விரும்பாத பெருந்தகையைத் தமிழ் மறைகள் நான்கும் நஞ்சரிக்கும் கோமானை வாழ்த்துகின்ற தமிழர் தமிழரென்பேன் மறந்தவரைச் சழக்கரெனச் சொல்வேனென்று போற்றிப் புகழ்கின்றன.

லெமூரியாவிலும் அதன்பின் தோன்றிய தீவூக் கூட்டங்களிலொன்றான இலங்கையிலும் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்று நீங்கள் உறுதி கொள்ள வேண்டும். இந்நாட்டின் பூரண உரிமையும் தமிழருக்கே உரியதென நெஞ்சுறுதி பெறல் வேண்டும். இந்நாட்டில் வாழ்ந்த நம் சந்ததியார் வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளை இன்றைய உலகமே அதிசயிக்கும் வண்ணம் தேடி வைத்திருக்கின்றார்கள்.

கமத்தொழிலும் கைத்தொழிலும் கடலை நிகர்த்த குளங்களும் கடைத் தெருக்களும் விஜயன் காலத்திற்குப்பின்பே இலங்கையில் ஏற்பட்டன என்ற இன்றைய சரித்திர ஆசிரியர்களின் கூற்று தப்பானது. தவறானது. ஆகாயத்திலே பறக்கும் விமானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு மேனாட்டாரின் ஆய்வுத் திறனைப் பாராட்டுகிறோம். ரைட் சகோதரர்களின் மூளையைப் போற்றுகிறோம். அனுமான் இலங்கைக்கு ஆகாய மார்க்கமாகப் பறந்து வந்ததை மந்திரமகிமை எனக் கூறுகிறோம்.

ஆனால் மறத்தமிழன் இராவணன் சீதையை ஆகாய மார்க்கமாக இலங்கைக்கு எடுத்து வந்தான் என்பதை எடுத்துப் பேச முன்வருகிறோமில்லை பெற்ற தாயைப் பிறர் முன்னிலையில் இழிவுபடுத்தும் செய்கைக்கு இது ஒப்பானதாகுமென உங்கள் மனதில் தோன்றவில்லையா?

பட்சிகளைப்போல் ஆகாயத்திலே மனிதன் பறக்கமுடியுமாவென எண்ணிப்பார்க்க முடியாத மிகப் பழங்காலத்திலே இராவணன் விமானத்தில் ஊர்ந்திருக்கிறான்.

விமானம் இராவணனிடம் இருந்ததென்று மட்டும் சொல்லாமல் இரத்மலானையிலோ, திருகோணமலைஇ கட்டுநாயக்கா போன்ற இடங்களிலுள்ள தளங்களிலோ ஓடிச்சென்று ஆகாயத்தில் எழுந்து பறக்கும் தத்ரூபக்காட்சியை ஆயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இராமாயணத்திலே நாம் காணமுடிவது ஆச்சரியமாக இல்லையா? இது நடுநிலைமைக் கண் கொண்டு தமிழ் பயின்றோர் ஆராய வேண்டியதொன்றாகும்.

புராணமென்னும் சொற்றொடருக்குள் இராமாயணம் புதைந்து விட்ட காரணத்தால் இராமன் போற்றப்பட்ட அளவுக்கு இராவணன் தூற்றப்பட்டான். இராமனுடைய வீரமும், தீரமும் ஏற்றிப் போற்றப்பட்ட அளவுக்கு இன்னுயிர் போக நேரினும் சூழ்ச்சியைக் கைக்கொள்ள விரும்பாத தமிழ்மகன் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறான். அவனுடைய நாடு செல்வத்தில் திளைத்துக்கிடந்தது. சென்னலும் கன்னலும் செழித்து வளர்ந்தன. தீங்கரும்புச்சோலைகளும்: தேரோடும் வீதிகளும், மாடமாளிகைகளுமாக அவனுடைய நகரம் காட்சியளித்தது. ஆனால் இராமாயணத்திலே இராவணனை நம்மால் காண முடியவில்லை. அந்த லட்சணத்தில் ஆகாயவிமானம் வைத்திருந்த ஆராட்சியாளன் இராவணன் என்பதை நாமறிய நமக்குத் திராணியேது?

ஆகாயவிமானம் தமிழரிடமும் தமிழகத்திலும் இருந்ததென்று பல ஏடுகள் எடுத்துக்கூறுகின்றன. விமானத்தை வானவூர்தி எனவும் அதைச் செலுத்துபவன் வலவன் எனவும் பழந்தமிழர் அழைத்தனர். மயிலைப்போன்ற விமானமொன்றை சீவகசிந்தாமணியில் காணமுடிகிறது. பட்டத்து இராணியொருத்தி அதை இயக்கப்பழகியிருந்தாள். ஆகாயத்தில் ஒருநாள் அவள் பறந்து கொண்டிருக்கையில் போர்முரசு ஆர்த்த ஒலி அவள் காதுகளில் விழுந்தது. மங்கை கை சோர்ந்து விமானம் கீழ் நோக்கி ஓர் மயானத்தில் விழுந்து நொறுங்கியது. அந்த ராணி ஒரு மகவைப் பெற்றாள் அதுவே சிந்தாமணியின்தலைவன் சீவகனாவான். இன்று பெரிய கோட்டை விமானங்களும் அக்காலத்தில் இருந்திருக்கின்றன. அவற்றை "தூங்கெயில்"என்று பழந்தமிழர் அழைத்தனர். இந்த விமானத்திலே ஊர்ந்து இன்னல் இழைத்த பகைவர்களை சோழமன்னன் ஒருவன் முறியடித்தான். அவனை "தூங்கெயில் எறிந்த தொடிதோட்செம்பியன்" என்று தமிழகம் புகழ்ந்தது.

தூங்கெயில் எறிந்த கொடி விளங்குதடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்

என "சிறுபாணாற்றுப்படை" பாராட்டிற்று. மாடிவீட்டை அமைக்கும் முறையை மேனாட்டாரே முதன் முதலில் கண்டு பிடித்தனரென்று சொல்லுகிறோம்.

அவர்கள் சிந்தனைத் திறனுக்கு பலமணிநேரம் வியாக்கியானம் செய்கிறோம். மண்குடிசையிலே வாழ்ந்த நம்மை மாடிவீட்டில் வசிக்கச் செய்த பெருமை மேனாட்டாருக்கே உரியதென உரைக்கிறோம். இக்குறைபாட்டுக்குக் காரணம் தமிழ் நூல்களைப் பயிலாததும் ஒன்றாகும். சிலப்பதிகாரத்துக்குள்ளே புகுந்தோமானால் அது மாடமாளிகையிலே மதி தவழும் நிலா முற்றங்களிலேயெல்லாம் நம்மைக் கொண்டுபோய் விடும். மதுரை மாநகர் மாடிவீடுகளால் நிரப்பப்பட்டுக்கிடக்கிறது. அந்த அழகிய தெருக்களில் இளங்கோ நம்மை அழைத்துக்கொண்டு செல்லுகையில் நியூயோர்க் பட்டணத்தில் நடமாடுவதைப் போன்ற உணர்ச்சி ஏற்படுவதை நாம் உணரக்கூடியதாக இருக்கும். மாதவி வீட்டிலிருந்து மனவெறுப்போடு கண்ணகியிடம் வந்த கோவலன்

உலர்ந்த பொருள் ஈற்றுதலுற்றேன் மலர்ந்த தீர் மாடமதுரையகத்துச் சென்றன் நோடிங்கு ஏடலர் கோதாய் எழுக.....

என்று கண்ணகியை அழைக்கிறான். "மாடி வீடுகளையுடைய மதுரைக்குச் செல்வோம்" புறப்படு என வேண்டிக் கொள்கிறான். நீங்கள் கண்ணுக்குத் தீட்டும் கருமை அன்று தமிழகப் பெண்களின் அலங்காரப் பொருள்களிலொன்றாய் இருந்தது.

மஞ்சள் பூசி, நீராடி, மைதீட்டிய கண்ணினராய் அவர்கள் காடசியளித்தனர். கிராமப் புறங்களில் "காக்கா காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா" என்று நாடோடிப் பாட்டாகப் பாடுவதை நாம் கேட்டிருக்கிறோம். அஜந்தா. சிகிரியா ஆகிய மலைக்குகைகளிலுள்ள

தொடர்ச்சி பக்கம்..15

# பறைமேள வித்துவான் களுதாவளை க.பரசுராமன்



பறைமேளக் கலையின் உயிரிருப்பின் காரணரான உயிர்வாழும் வல்லபங்களில் களுதாவளையின் க.பரசுராமன் தனியிடம் பெறுபவர். எளிமையும், அமைதியும், ஆழ்ந்த அறிவனுபவமும் கொண்டவர். பறைமேளக் கலையின் சூட்சுமங்கள் அறிந்த வித்தைக்காரன்.

சாதி ஆதிக்கம் காரணமாகப் பறைமேளக் கலை எதிர்கொண்ட நரக அனுபவங்களைச் செரித்து நிமிர்ந்தவர். 'வா' வென வரவும், 'போ' வெனப் போகவுமென சிப்பிலியாட்டப்பட்ட பண்பாட்டு நாசகாரத்தனங்கள் என்னும் தீப்பள்ளையத்துள் அமிழ்ந்து போகாமல் பறைமேளக்கலையின் உன்னதத்தைச் சுமந்துவந்து தந்திருப்பவர்.

சமூகத்திற்கு வெளியிலிருந்து மட்டுமல்லாது உள்ளிருந்தும் நிகழ்த்தப்பட்ட நாசகாரத்தனங்களையும் எதிர் கொண்டு நிமிர்ந்து நிற்பவர். க.பரசுராமனின் ஆன்ம பலமாகவும் அறிவுப் பலமாகவும் இருந்தவர் அவரது துணைவியார்.

இவர் பறைமேளக்கலை மேதைமையும் பல்துறை ஆளுமையுமான களுதாவளை ஆனைக்குட்டி அவர்களின் மகளாவார்.

சமூகப் பண்பாட்டு வெளிகளில் மிகவும்

**கலாநிதி சி.ஜெயசங்கர்**

கீழ்த்தரமாக நடத்தப்பட்ட பறைமேளக் கலையினை, அதன் முக்கியத்துவம் உணர்ந்து நெஞ்சுரத்துடன் முன்னெடுத்த கலைப் பயணத்தின் ஆளுமைகளில் ஆனைக்குட்டி, பரசுராமன் குடும்பமும் ஒன்றாகும்.

பறைமேளக் கலை சம்மந்தப்படும் அனைத்தும் சமூகப் பண்பாட்டு விழாக்கள், நிகழ்ச்சிகள் சார்ந்த அறிவும் அனுபவமும் திறனும் கொண்ட நிறைந்த ஆளுமையாக க.பரசுராமன் பரிணமித்திருக்கிறார் என்பதை அவருடன் உரையாடுபவர் அறிவர்.

பறைமேளக்கூத்து, கூத்து, பறைமேளக் கலை ஆற்றுகைகள், உள்ளூர் வாத்திய, இசைக்கருவி ஆற்றுகைகள்,



பறையறைவோன் கூத்தர் கூத்து மீளுருவாக்க பங்குகொள் ஆய்வு, ஆற்றுகை ஆய்வுகள், பங்குகொள் ஆய்வுச் செயற்பாடுகள், கிராமத் தெய்வ சடங்குகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களென அவருடனான தொடர் ஊடாட்டமும் பயணமும் க.பரசுராமன் பற்றிய மேற்படி மனப்பதிவைத் தந்திருக்கிறது.


இத்தகைய அமைதியும் உறுதியும் கொண்ட ஆளுமைகளின் இருப்பு ஆதிக்க நீக்கத்திற்கான செயற்பாடுகளில் வெளித் தெரியவராத, ஆனால் வலுவான செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடியும். வாய்மொழி வழக்காற்று அறிவுமுறைகளின் நிராகரிப்பு அல்லது ஓரங்கட்டல் ஆனைக்குட்டி, பரசுராமன் போன்றவர்களின் ஆளுமைகளின் அறிவிருப்பை அறியாது போகச் செய்திருக்கிறது. இது முழுதான அறிவுருவாக்கக் குறைபாடென்றே கூறமுடியும்.

நாசகாரத்தனமான பண்பாட்டு விழுமியங்கள் கட்டவிழ்த்து விடுகின்ற கொல்லாமல் கொல்லும் வன்முறைகளுக்கு முகங்கொடுத்து எங்கள் மத்தியில் ஆதிக்கலையாம் பறையொலி இன்றும் முழங்க க.பரசுராமன் போன்ற கலை ஆளுமைகளின் இருப்பும் இயக்கமுமே அடிப்படையாகும்.

தமிழர்களின் தொன்மைக் கலையாம் பறைமேளம் என்னும் கம்பீர வாத்தியம் தீட்டுக்குரியதாக ஆக்கப்பட்ட கதை தனிக் கதை. இது அடிமைப்படுத்தலின் கதை.

தீட்டு நீங்கி மங்கலப் பறையாகத் தமிழர்தம் பறை ஒலிக்கும் காலமே விடுதலைக் காலம்.

# பட்டங்களும் இலக்கியப் போலிகளும்




இலங்கையில் தமிழ் அரச இலக்கிய விழாக்களை மத்தியில் இந்து கலாசார அமைச்சும், மாகாண ரீதியில் வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா மாகாண அரசுகளும் நடத்துகின்றன.

மத்திய, ஊவா மாகாணங்களில் அரச இலக்கியவிழா அரசியல் விழாவாகவே நடத்தப்படுவதாக நீண்ட காலமாகவே ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதுபோல வடக்கு, கிழக்கில் அதிகாரிகளின் விழாவாகவே நடத்தப்படுவதான பார்வையும் உண்டு.

எங்கும் இலக்கியக்காரர்களின் விழாவாக நடைபெறுவது மிகக்குறைவு. நடைபெறும் ஆய்வரங்கில் வந்துள்ள இலக்கியக்காரர்களின் தலைகளை எண்ணினாலே புரியும். கேட்டால் அழைப்பிதழ் கிடைக்கவில்லை என்பார்கள்.

அதுவல்ல விடயம், வழமையாகவே அங்கு வழங்கப்படும் பட்டங்களும் விருதுகளும் விமர்சனத்திற்குள்ளாவது வழமை.

**சி. வன்னமணி**

ஒன்பது தகுதியுடன் ஒரு தகுதியற்றது சேர்ந்தாலும் பத்தும் ஒன்றாகத்தான் பார்க்கப்படும். வெளிப்படைத்தன்மை இல்லாமைதான் எல்லாவற்றிற்கும் காரணம். அது நூலுக்கான விருதாகட்டும், இலக்கியவாதிக்கான விருதாகட்டும் எல்லாம் ஒன்றுதான்.

முதலில் படைப்பாளிகள் பைல் கட்டுக்களைத் தூக்கி பட்டம் தா? என்று கேட்பதை நிறுத்த வேண்டும். நல்ல காத்திரமான படைப்பாளிகள் தன்மானத்தை விற்கத் தயாரில்லை.

இதனால் போலிகள் அந்த இடத்தை ஏதோ வழிகளில் யார் யாரையோ பிடித்து பட்டங்களை வாங்கி படம் காட்டுகின்றனர்.

கடைசியில் அவர்கள் எழுதியவற்றையெல்லாம் கவிதையென்றும் சிறுகதையென்றும் நாவலென்றும் நம்பவேண்டியிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பட்டங்களின் கனதி அப்படி. நாமே ஒரு குழுவை அமைத்து நல்ல படைப்பாளிகளைத் தேடி கௌரவத்தை கொடுத்து அவர்களை கௌரவப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் வழங்கும் பட்டத்திற்கும் பெற்றுக் கொள்ளும் படைப்பாளிக்கும் மதிப்பும் மரியாதையும் உண்டாகும்.

நூல்களுக்கு பரிசு வழங்கும் போது கட்டாயம் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும்.

2018 சிறுகதைத் தொகுப்பென்றால் அந்த ஆண்டில் வெளிவந்து, தங்களுக்கு போட்டிக்கு வந்த தொகுப்புக்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டும். போட்டிற்குரிய துறைசார்ந்தவர்களை நடுவர்களாக நியமிப்பதுடன் அவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும்.

போட்டி முடிவுகளின் போது நடுவர்களின் சிறு குறிப்புடன் முடிவுகளை வெளியிடலாம். வந்த நூல்களை வெளியிடுவதனால் தாங்கள் நூல்களை அனுப்பி கிடைத்த / கிடைக்காத தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

கிழக்கு மாகாண புத்தக தேர்விற்கு சிறுகதைப் பிரிவிற்கு அனுப்பியது, கட்டுரைப் பிரிவிற்கு விடயம் தெரியாதவர்களால் அனுப்பப்பட்டு விட்டதாக ஒரு தகவல்.

வந்த நூல்களின் எண்ணிக்கையும் விபரமும் தெரியாமல் தங்கள் நூலுக்கு பரிசு கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுவோர் அநேகர்.

முகநூல்களில் பலர் புலம்புவதையும் காணலாம். நூல்களின் பட்டியலை வெளியிடும் போது தங்களைவிடத் தகுதியான படைப்பிற்கு பரிசு கிடைத்துள்ளதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

முன்பு சுதந்திர இலக்கிய விழா, இவ்வாறுதான் பரிசுகளை வழங்கும். குறிப்பிட்ட ஆண்டில் வெளிவந்த நூல்களைத் தாங்களே தேடிப் பெற்று, அதில் சிறந்த நூல்களைத் தேர்வு செய்து நடுவர் சிறுகுறிப்புடன் முடிவை அறிவிப்பார். அந்தப் பரிசைப் பெறும் போது கர்வமாக இருக்கும்.

ஒரு வகை திமிருடன் நெஞ்சை நிமிர்த்தி அந்தப் பரிசை பெற்றுச் செல்வான்.

ஆனால் இன்று மதிப்பிழந்த சம்பவங்களே அதிகம்.

இன்று போட்டிக்கென்றே நூல் எழுதி பரிசு வாங்கும் பலர் இருக்கிறார்கள். எந்தப் பிரிவிற்கு நூல்கள் வரவில்லை அல்லது வந்தது குறைவு என உள்ளுக்குள் அறிந்து அதற்காக ஐம்பது புத்தகங்களை அச்சிட்டு பரிசை அள்ளுவோரும் உண்டு.

வெளிப்படைத் தன்மையினால் பலவற்றை தவிர்க்கலாம். போலிகளை இனங்காணலாம்.

தகுதியானவற்றிக்கு கிடைக்கும் பரிசு என்றாலும் பட்டம் என்றாலும் ஓர் அர்த்தம் இருக்கும், மதிப்பும் மரியாதையும் உண்டாகும்.

தொடர்ச்சி...

## முஸ்லிம் உயர்....

மாநாட்டைச் சர்வதேச மட்டத்தில் நடத்தி வருகின்றனர்.

இந்த மாநாட்டை இலங்கையில் நடத்த பௌத்த பிக்குமார் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். ஆனாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட உத்தரவில் இந்த மாநாடு நடைபெற்றது.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் காணியொன்றில் பெரிய இந்த மாநாட்டினால் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் கடந்த இருவாரமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

முதன் முதலாகக் கொழும்பில் நடத்தப்பட்ட இந்த மாநாட்டினால் சுமார் 39 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் இலங்கைக்குக் கிடைத்துள்ளதாக மைத்திபரிபால சிறிசேன வெள்ளிக்கிழமை இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது கூறியிருந்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடுமையான நெரிசல் ஏற்பட்டுள்ளதால் கடும் விசனமடைந்துள்ள பௌத்த பிக்குமார் பகுதி பகுதியாக வெளியேறுமாறு போரா சமூகத்தினருக்கு உத்தரவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியிருந்தனர்.

# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 13




## "குரான் வன்முறையைப் போதிக்கிறதா?' உஸ்தாத் மன்சூர் எழுதிய நூல் வெளியீடு

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 13)*



03.09.2010 இல் கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முக்கியமான ஓர் நூல் வெளியீட்டில் கலந்து கொண்டேன்.

நூலின் பெயர் அல் குரான் வன்முறையைத் தூண்டுகிறதா?

நூலின் ஆசிரியர் உஸ்தாத் மன்சூர் அவர்கள்.

உஸ்தாத் மன்சூர் எனக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் இவ் ஆண்டின் ஆரம்பத்தில் அறிமுகமானார். குரானிய சிந்தனை ஜுஸ்உ அம்ம விளக்கவுரை 2ஆம் பாக வெளியீடு கொழும்பில் நடைபெற்றபோது நான் அந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டேன்.

குரான் ஆன்மீக ஈடேற்றத்தை மட்டும் மையப்படுத்தும் நூலன்று அது ஓர் சமூகவியல் நூல் என்ற வகையில் அது எழுதப்பட்டிருந்தது. அவரை அறியும் வாய்ப்பும் அந்நூலைப் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

உஸ்தாத் மன்சூர் நடுநிலை இஸ்லாமிய சிந்தனையை மிகப் பரவலாகக் கொண்டு செல்லும் ஓர் நிதானமான ஆய்வறிவாளர். அத்தோடு எனது பேராதனைப் பல்கலைக்க்ழக உடன் மாணாக்கரும் நளீமியாவின் பணிப்பாளருமான நண்பர் சுக்கிரியின் மாணவர். சிலகாலம் நளீமியாவில் விரிவுரையாளராகவும் பணி புரிந்தவர்.

மிஸ்காத் எனவோர் ஆய்வு நிறுவனம் அமைத்து அதன் வெளியீடுகள் மூலம் இஸ்லாத்தின் சமூகப் பார்வையை அழுத்திவருகிறார்.

இந்தவகையில் நிறைய வகுப்புக்கள், உரைகள் நடாத்திவரும் அதேவேளை புத்தகங்கள், மொழிபெயர்ப்புக்கள், கட்டுரைகள் என பல ஆக்கங்களையும் செய்துள்ளார். செய்துவருகிறார்

இம்முறையும் அவர் எனக்கு அழைப்பு விடுத்து மாத்திரமன்றி அந்நூல் விமர்சனத்திற்கு எனது துணைவியார் சித்திரலேகாவையும் அழைத்திருந்தார்.

அந்நூல் பற்றி இன்னோர் விமர்சன உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தவர் களனிப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவரான கல்கந்தே தர்மானந்த தேரர் அவர்கள்.

இன்னொருவர் ஜனாதிபதி சட்டத்தரணியான



எம். யு.எம். சப்ரி அவர்கள்.

தலைமை தாங்கியவர் ஜனாதிபதி சட்டத்தரணியான பாயிஸ் முஸ்தபா அவர்கள். கூட்டம் நடைபெற்ற இடம் பண்டாரநாயக்க சர்வதேச மஹாநாட்டு மண்டப லூட்டஸ் ஹால்.

அளவான அந்த ஹால் அறிவாளிகள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரால் நிரம்பியிருந்தது.

தொழிநுட்ப வசதிகள் ஒழுங்குறச் செய்யப்பட்டிருந்தமையினால் உரைஞர்களின் உரையினையும் முக பாவங்களையும் தெளிவாகக் கேட்கவும் பார்க்கவும் முடிந்தது.

அனைவரது உரைகளும் காத்திரமாக இருந்தன. நூல் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருந்தது.

அறிமுகம் செய்தவர் அழகாக மும்மொழிகளிலும் அறிமுகம் செய்தார்.

சித்திரலேகா தனது விமர்சன உரையில் காலம்தோறும் சில முக்கிய நூல்கள் பொருள் கொள்ளப்படும் முறையினைக் கூறி அதன் பின்னணியில் குரானை மன்சூர் பொருள் கொண்ட முறையினை விளக்கினார்.

பாயிஸ் முஸ்தபா ஆங்கிலத்திலும் சித்திரலேகா தமிழிலும் ஏனையோர் சிங்களத்திலும் உரை நிகழ்த்தினர். சிங்கள பார்வையாளரை மையமாகக் கொண்டே கூட்டம் அமைக்கப்பட்டிருந்தது போலத் தோன்றியது.

சிங்கள உரைகளுக்கும் தமிழ் உரைக்கும் ஓர் மொழி பெயர்ப்பிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

கச்சிதமான கூட்டம், நல்ல ஒழுங்கமைப்பு, அலுப்புச் சலிப்பு ஏற்படவில்லை.

ஒரு வெளியீடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாராணமாக அமைந்திருந்தது கூட்டம். கூட்டம் முடிய வெளியே சிற்றுண்டி நேரம் பிரயோசனமான நேரம்.

பலரையும்கண்டு உரையாட முடிந்தது.

பேருவளை நளீமியா ஸ்தாபகர் நளீம் ஹாஜியாரின் மகன் தன்னை அறிமுகப்படுத்திகொண்டு எம்முடன் உரையாடினார்.

சட்டவல்லுநர் சப்பிறியின் இங்கிதமான ஆழமான உரையாடல் மனதைக்கவர்ந்தது. அவரது ஒரு நேரகாணலும் பார்த்துள்ளேன். உணர்ச்சி வசப்படாத ஆய்வு ரீதியான உரையாடல் அவ்வுரையாடல் பற்றியும் அளவளாவிக் கொண்டோம்.

கூட்டம் முடிய வெளி ஹாலில் சிற்றுண்டி



சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தேடி வந்து பேசினர் பலர். பெரும்பாலானோர் இளைஞர்கள். அவர்களுள் பலர் நளீமியாவின் மாணவர்கள். அவர்களாக வந்து தம்மை அறிமுகம் செய்து எம்முடன் உரையாடினர். செல்பியும் எடுத்துக்கொண்டனர். அவர்களின் உரையாடலில் அவர்களின் ஆழமான பரந்த வாசிப்பு தெரிந்தது.

நான் அக்காலத்தில் எழுதிய பின் நவீனத்துவமும் கூத்தும் என்ற கட்டுரையின் சில பகுதிகளைச் சிலாகித்து அது பற்றி ஓர் இளைஞன் என்னுடன் உரையாடியபோது நான் அசந்துவிட்டேன். அறிவு மிகுந்த, தேடல் மிக்க, வாசிப்புத் திறன்மிக்க, நவீனத்துவத்துடன் பரிச்சயமான ஓர் தலைமுறை அங்கு உலாவித்திரிந்தது.

சிற்றுண்டியின்போது ஓர் முதிர் இளைஞர் தன்னை எம்முடன் அறிமுகம் செய்தார். அவர் ஜே வி.பி மத்திய கமிட்டி உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் ரட்ணநாயக்கா. தமிழ் நாடகம் பற்றியும் சிங்கள நாடகம் பற்றியும் என்னுடன் உரையாடிய அவர், சிங்கள தமிழ் கலைகளுக்கிடையிலான உறவுகள் பற்றி நான் எழுதி சிங்கள மொழியில் வந்த கட்டுரை பற்றியும் குறிப்பிட்டார்.

மிக எளிமையாகவும் எந்த வித பந்தாக்களுமின்றி பேசிய அவர் எம் மனதைக் கவர்ந்தார்.

எல்லாவற்றையும் வாசிக்கும், சிந்திக்கும் தேடல் மிக்க ஓர் இளைஞர் கூட்டத்தைக் கண்டமை மகிழ்ச்சி தந்தது.

---

# தலை அரசியல்? 'தலை'யாய பிரச்சினை?

இன்று மட்டக்களப்பு மக்களின் தலையாய பிரச்சனை "தலை". இதன் மாயத்தோற்றம் என்னவென்று புரியவில்லை. தலையின் பின்னால் மக்களின் உண்மையான பிரச்சினைகளும் அன்றாடப்



பிரச்சனைகளும் மறைக்கப்பட்டு விடுகின்றன. தலையால் தான் மட்டக்களப்பு தலை நிமிரவில்லை என்பதுபோல செத்த தலை உயிரூட்டப்பட்டுக் கொண்டே இருக்கிறது. மட்டக்களப்பு மண் அள்ளுப்பட்டுக் கொண்டேயிருக்கிறது, கிறவல்



தோண்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறது, குப்பைக்கு நிரந்தர தீர்வில்லை, தண்ணீர் பிரச்சனை, யானைப் பிரச்சனை, நிர்வாக ஒழுங்கு சீரில்லை, வைத்தியசாலைகளில் நோயாளர்கள் படும் துன்பம், அன்றாட உழைப்பாளர்களின் வருமானப் பிரச்சினை என்று பட்டியல் நீண்டு கொண்டே

**வ.ச. முரளிசேகரன்**

செல்லும் வேளையில் இதனையெல்லாம் சிந்திக்கவிடாமல் தீர்வை நாடவிடாமல் "தலை"தான் முன்நிற்கிறது.

இப்போது "தலை" ஊர்வலமாக ஒவ்வொரு பிரதேச செயலகமாகச் செல்கிறது. அதற்கான நேரமும் சக்தியும் வீணடிக்கப்படுகிறது. இடுகாடு, சுடுகாடு அதிகாரம் யாரிடம், பிரதேச செயலாளரிடமா? உள்ளூராட்சி சபைகளிடமா? என்ற வினா எழுகிறது. பிரதேச சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ள முனைகிறது. இனிமேல் உடலங்களை புதைப்பதற்கான அனுமதிகளை பிரதேச செயலகங்களிடம் தான் பெற வேண்டும் என்ற நிலை உருவாவதாக சில பிரதேச சபை உறுப்பினர்களே ஆதங்கப்படுகின்றனர். பல உள்ளூராட்சி சபைத் தலைவர்களுக்கு தங்களுக்கு அழைப்பிதழ் வந்த பின்தான் என்ன நடக்கிறது என்பதே புரிகிறது. சிலருக்கு கூட்டத்திற்கு வந்தபின்தான் புரிகிறது. "தலை" அரசியலாக்கப்பட்டபின் மட்டக்களப்பில் புதைப்பதற்கான வாய்ப்பில்லை என்று தெரிந்தும் ஏனிந்த தலை ஊர்வலமோ தெரியாது. இதுவும் ஒருவகை அரசியலோ?

கிட்டத்தட்ட எல்லா பிரதேச செயலகங்களும் இதனை நிராகரித்துக் கொண்டே வருகின்றன. இதனை விட அரச அதிபர் பிரதேச செயலாளர்களையும், உள்ளூராட்சி சபைத் தலைவர்களையும், உள்ளூராட்சி செயலாளர்களையும்,ஆணையாளர்களையும் மட்டும் அழைத்துப்பேசி, தங்கள் பிரதேச எல்லைகளுக்குள் புதைக்கலாம் என்று கூறுபவர்களை மட்டும் இனங்கண்டு அவர்கள் மட்டும் மக்களின் கருத்துக்களை அறிய கூட்டங்களை கூட்டியிருக்கலாம். இதனை விடுத்து, அரச கட்டளையாக விடுத்து, ஏற்கனவே இன முரண்பாட்டுடன் உள்ள பிரதேச செயலகங்களில் எல்லாம் பெருந்தீ மூட்டவே இது உதவுகிறது. உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு மெல்லுவதற்கு அவலை அள்ளிக்கொடுத்த கதையாகிவிட்டது. எங்கள் பிரச்சனைகள் எல்லாம் எங்கோ மறைந்து, எவனின் பிரச்சனைகளை எம்பிரச்சனையாய் எண்ணி அடித்துக்கொள்ளுகிறோம்.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

கூர்ப்பும் பரம்பரையலகு மீடிறன் மாற்றமும் (Evolution and change in frequency) பரம்பரைகளுக்கூடாக எதிருரு (பரம்பரையலகு) மீடிறன் மாற்றங்கள் சார்பாக கூர்ப்பானது விளக்கப்படலாம். பரம்பரையலகு மீடிறன்களில் ஏற்படும் மாற்றங்கள், ஒரு தனித்துவமான சூழற்றிதிக்கு இனத்தை ஓர் உயர்மட்டத்துக்குள் செலுத்தும்போது ஒரு இனம் கூர்ப்படைகின்றது. குடித்தொகையின் அகத்தே ஏற்படும் பிறப்புரிமையியலுக்குரிய மாறலே கூர்ப்புக்கான முக்கிய திறவு கோலாக உள்ளது. விகாரங்கள் புதிய எதிருருக்களை உருவாக்கும் புலம்பெயர்தல் மாறலை அதிகரிப்பதற்காக அதனை குத்தொகைக்குள் உள்ளடக்கும். இயற்கைத் தேர்வானது பின்ர் அவற்றின் தோற்றவமைப்புக்குரிய மாறலின் அடிப்படையில் சிறப்பாக இசைவாக்கம் பெற்ற தனியன்களைத் தேர்ந்தெடுத்து குடித்தொகையை கூர்ப்படையச் செய்கின்றது. இதன் பெறுபேறாக, மூர்ப்படைவதற்கு முன்னதாக அவை காண்பித்த இசைவாக்கத்தின் மட்டத்துடன் ஒப்பிடப்படும் போது, கூர்ப்பின் பின்னர் கூடித்தொகையானது இசைவாக்கத்தின் ஓர் உயர் மட்டத்தில் காணப்படும்.

இந்த எண்ணக்கருவானது, கைத்தொழில் முன்னேற்றக் காலப்பகுதியில் இங்கிலாந்தில் காணப்பட்ட கருமை – வெளிர் கொண்ட (மிளகுதூள் போன்ற) நிறமுடைய அந்துப்பூச்சிகளின் கூர்ப்பினால் விளக்கப்படலாம். அந்துப்பூச்சிகள் அவற்றின் கருமை மற்றும் வெளிறிய நிற அடிப்படையில் இரண்டு தோற்றமைமப்பிற்குரிய பேதங்களைக் கொண்டு காணப்பட்டன. மத்திய இங்கிலாந்தில் கைத்தொழில் அதிகரிப்பு நிகழ முன்பு, வெளிறிய நிறமுடைய எதிருருக்கள் பெருவழக்கில் காணப்பட்டன. பறவைகளினால் இரையாக்கப்படுவதைத் தடுப்பதற்காக வெளிறிய நிறமுடைய அந்துப்பூச்சிகள் வெள்ளைநிறப்பட்டமையுடைய மரங்களின் மேல் மறைந்து வாழக்கூடியனவாகக் காணப்பட்டமையினால், வெளிறிய நிறமுடைய அந்துப்பூச்சிகள் கருமை நிறமுடைய அந்துப்பூச்சிகளையும் பார்க்க அனுகூலம் பெற்றவையாக விளங்கின. கைத்தொழில் அதிகரிப்புடன் இணைந்ததாக உற்பத்திபண்ணப்பட்ட மாசுக்களின் விளைவாக வெள்ளைநிறப்பட்டடை கொண்ட மரங்கள் கருமையாகச் சாயமூட்டப்பட்டன. இது வெளிர் நிறமுடைய அந்துப்பூச்சிகளை இரைகௌவலுக்கு வெளிப்படுத்தியதால் அவை தமது எண்ணிக்கையில் குறைந்தன. இதன் பெறுபேறாக வெளிர்நிறமுடைய எதிழருரு குறைந்தளவு மேலோங்கிக் காணப்பட்டது. அதனிடத்தில் கருமை நிற எதிருரு கூடியளவாக மேலொங்கிக் காணப்பட்டது. ஏனெனில் கருமை நிற அந்துப்பூச்சிகள் சாயமூட்டப்பட்ட மரங்களின் மேல் சிறப்பாகத் தம்மை மறைத்துக்கொள்ள முடிந்ததுடன் அவற்றின் இரைகௌவிப் பறவைகளினால் தாம் உண்ணப்பட முடியாமலும் தவிர்த்துக் கொண்டன. குடித்தொகையானது பரம்பரையலகு மீடிறன்களில் ஏற்பட்ட மாற்றத்துடன் ஓர் உயர்வான இசைவாக்கமட்டத்துக்குக் கூர்ப்படைந்தது.

தாவரம் மற்றும் விலங்குகளின் இனவிருத்தி (Plant and animal breeding) விவசாயம் ஆரம்பித்த எட்டு முதல் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் இனப்பெருக்க, பிறப்புரிமையியற் கட்டமைப்புக்களில் தலையிட்டுள்ளனர். ஆரம்ப விவசாயிகள் அடுத்த பருவக்காலத்தில் பயிரிடுவதற்காகச் சிறப்பான தொற்றங்கொண்ட தாவரங்களையும் வித்துக்களையும் தேர்ந்தெடுத்து அவற்றைப் பாதுகாத்தனர். இது போன்றே சிறப்பான தோற்றமுடைய விலங்குகள் பாதுகாப்பதற்காகவும் விரும்பப்படும் இயல்புகளை முன்னேற்றுவதற்காகவும் ஒன்றுடனொன்று புணரவிடப்பட்டன. முன்னேற்றமடைந்த இயல்புகளைக் கொண்ட எச்சங்கள் உற்பத்திபண்ணப்பட்டக்கூடியதாக, தேர்வுக்குரிய புணர்ச்சி மாத்திரம் நிகழ்வதற்கு அனுமதிக்கும் மனிதர் தலையீடுள்ள இந்த இனப்பெருக்கச் செயன்முறை இனவிருத்தி (breeding) என அழைக்கப்படும். (இயற்கையான இனப்பெருக்கத்துக்கு மாறாக)

பிறப்புரிமையியலுக்குரிய விஞ்ஞானம் சிறப்பாக விளங்கப்பட்டதும், தாவர மற்றும் விலங்கு இனவிருத்தியாளர்கள் முன்னேற்றமடைந்த தாவரப்பேதங்கள் அல்லது விலங்கு இனங்களை விருத்திசெய்யவதற்காக தாவரம் மற்றும் விலங்குப் பரம்பரையலகுகள் பற்றி அவர்கள் அறிந்துகொண்டதை தனித்துவமானதும் விரும்பப்படுவதுமான இயல்புகளைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பயன்படுத்தினர். புயிர்த்தாவரங்களில் வேகமான வளர்ச்சி, உயர்வான விளைச்சல், பீடை மற்றும் நோயெதிர்ப்பு திறன், பெரிய வித்துக்கள் அல்லது இனிப்பான பழங்களில் தோலின் நிறம் மற்றும் வடிவம், மயிர்கள், இறகுகள் போன்ற சிறப்பியல்புக்கான தேர்வு, இப்பொழுது, அவற்றின் வான்வகை ஆச்சரியத்தக்க விதமாக மாற்றி விட்டது.

தாவர மற்றும் விலங்கு இனவிருத்தியின் முக்கியத்துவம் இனவிருத்திச் செயன்முறை நிகழ்ச்சி நிரல்களில் மனித குலத்துக்கு கூடியளவு பயன்மிக்கதாக அமையவேண்டிய ஒரு வகையில் தாவரங்களினதும்

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

### பின்னங்களைப் பெருக்குதல்

(1) $\frac{2}{3} \times \frac{5}{7}$

$= \frac{2 \times 5}{3 \times 7}$

$= \frac{10}{21}$ //

- பகுதி எண்ணைப் பகுதி எண்ணாற் பெருக்கி, விடையின் பகுதி எண் பெறப்படும்.
- தொகுதி எண்ணைத் தொகுதி எண்ணாற் பெருக்கி, விடையின் தொகுதி எண் பெறப்படும்.

(2) $\frac{3}{4} \times \frac{5}{9}$

$= \frac{\cancel{3}^{1}}{4} \times \frac{5}{\cancel{9}_{3}}$

$= \frac{5}{12}$ //

- இங்கு 3, பகுதி, தொகுதி எண்களின் பொதுக் காரணியாகும்.
- பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 3 ஆல் வகுத்து, பின்னர் பெருக்க வேண்டும்.

(3) $\frac{4}{5} \times \frac{5}{6}$

$= \frac{\cancel{4}^{2}}{\cancel{5}_{1}} \times \frac{\cancel{5}^{1}}{\cancel{6}_{3}}$

$= \frac{2}{3}$ //

- இங்கு 5, 2 பகுதி, தொகுதி எண்களின் பொதுக் காரணியாகும்.
- பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 5, 2 ஆல் வகுத்து, பின்னர் பெருக்க வேண்டும்.

கலப்புப் பின்னங்களைப் பெருக்கும் போது, அப்பின்னத்தை முறைமையில்லாப் பின்னமாக மாற்றி, பின்னர் பெருக்க வேண்டும்..

(4) $3\frac{1}{3} \times 4\frac{4}{5}$

$= \frac{10}{3} \times \frac{24}{5}$

$= \frac{\cancel{10}^{2}}{\cancel{3}_{1}} \times \frac{\cancel{24}^{8}}{\cancel{5}_{1}}$

$= \frac{16}{1}$

$= \mathbf{16}$

பின்வரும் பின்னங்களைச் சுருக்குக. (இதிலேயே செய்துபாருங்கள்)

| | | |
|---|---|---|
| (i) $\frac{3}{5} \times \frac{3}{4}$ | (ii) $\frac{3}{8} \times \frac{1}{4}$ | (iii) $3\frac{3}{4} \times 1\frac{7}{15}$ |

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 51

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

1. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு
(1) அம்மா (2) இது (3) எது (4) யாது

2. பின்வருவனவற்றுள் புறச்சுட்டு
(1) இவ்வீடு (2) அது (3) அந்த (4) உறவு

3. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம் அல்லாதது
(1) நாற்று (2) அப்பா (3) தேட்டம் (4) தட்பம்

4. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் அல்லாதது
(1) தம்பி (2) செங்கை (3) துள்ளல் (4) சிற்பம்

5. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
(1) உயிர் (2) படகு (3) காடு (4) அறிவு

6. பின்வருவனவற்றுள் மென்றொடர்க் குற்றியலுகரம் அல்லாதது
(1) மார்பு (2) சந்து (3) பந்து (4) அஞ்சு

7. பின்வருவனவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் அல்லாதது
(1) நாகு (2) காடு (3) தேடு (4) பாரு

8. பின்வருவனவற்றுள் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் அல்லாதது
(1) க஼சு (2) எ஼கு (3) அ஼றிணை (4) அ஼து

9. பின்வருவனவற்றுள் பகுபதம் அல்லாதது
(1) தேடல் (2) வாழ்வு (3) ஊரன் (4) ஓடு

10. பின்வருவனவற்றுள் பகாப்பதம்
(1) மாடி (2) ஆடி (3) கூடி (4) பாடி

11. பின்வருவனவற்றுள் இடைநிலை
(1) த் (2) கிறு (3) இருந்து (4) ட்

12. பின்வருவனவற்றுள் சாரியை அல்லாதது
(1) இன் (2) மாட்டு (3) அத்து (4) அன்

13. பின்வருவனவற்றுள் பொருட்பெயர் அல்லாதது
(1) நூல் (2) மாடு (3) இறகு (4) நீர்

14. பின்வருவனவற்றுள் இடப்பெயர்
(1) மணி (2) மீசை (3) தலை (4) முற்றம்

15. பின்வருவனவற்றுள் சினைப்பெயர்
(1) சிறகு (2) மரம் (3) மலை (4) சுளகு

16. பின்வருவனவற்றுள் மாற்றுப்பெயர்
(1) நீங்கள் (2) வருக (3) வா (4) வந்தது

17. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்
(1) ஆடுதல் (2) ஆடிய (3) ஈடு (4) இடு

18. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர்
(1) ஊன்றுகோல் (2) கோல் (3) அழகான (4) அறிவுள்ள

19. பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயர்
(1) வந்தான் (2) வந்தவன் (3) அவன் (4) வரவில்லை

20. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் அல்லாதது
(1) அடித்தல் (2) படிதல் (3) வந்தமை (4) ஆட்டம்

21. பின்வருவனவற்றுள் தனிவினை
(1) பார்த்துக்கொள் (2) பார்வை (3) வருதல் (4) வந்தது

22. பின்வருவனவற்றுள் கூட்டுவினையடி
(1) சொல்லிப்பார் (2) எழுதி வாசி (3) கேட்டுக்கொள் (4) தூங்கவை

23. பின்வருவனவற்றுள் எச்சவினை
(1) கொண்டான் (2) ஊன்றுக (3) படிதல் (4) படிக்க

24. பின்வருவனவற்றுள் எதிர்மறைவினை அல்லாதது
(1) போகான் (2) போவேன் (3) வரவில்லை (4) ஓடாது

25. பின்வருவனவற்றுள் உடன்பாட்டுவினை
(1) தேட்டம் (2) ஓடுதல் (3) எழுதுகிறான் (4) ஆடமாட்டான்

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

இயற்பண்புகள், கட்டமைப்பு மற்றும் உடற்கூறு ஆகியன கையாளப்படுகின்றன.

இதன் பிரகாரம் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது போன்று தாவரம் மற்றும் விலங்கு இனவிருத்தியானது உலகின் விவசாயப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கதான தாக்கமுடையதாக விளங்குகின்றது.

உலகின் உணவு மற்றும் ஊட்டல் தராதரத் தேவைகளுக்கு முகங்கொடுத்தல் 200 மில்லியன் சிறுவர்கள் உட்படட 800 மில்லியன் மக்கள் போசணைக் குறைபாட்டினாலும் இது சார்பான உடல் நலப்பிரச்சினைகளாலும் அவதியுறுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உணவின் போசனைக்குரிய தரத்தை முன்னேற்றுவதன் மூலம் உணவின் பெறுமதியை உயர்த்துவதற்கு இனவிருத்தி உதவுகின்றது. உதாரணமாக, மிகப்பெருமளவாக உண்ணப்படும் முக்கிய உணவான அரிசி பல அத்தியாவசிய விற்றமின்கள் அற்றுக் காணப்படுகின்றது.

பிரதான பயிர்களால் எதிர்கொள்ளப்படும் மற்றுமொரு பிரச்சினை கருணைக்கிழங்கில் காரப்போலிகள் (alkaloids), மரவள்ளிக்கழங்கில் சயனோஜீனிக் குளுக்கோசைட்டுகள் (Cyanogenic glucosides)> தானியங்களில் திரிச்சின் நிரோதிகள், உருளைக்கிழங்குகளில் ஸ்ரீரோயிட்டுக்குரிய காரப்போலிகள் போன்ற நச்சுத்தன்மையான பதார்த்தங்கள் அவற்றுள் இருத்தல் ஆகும். இந்த நச்சுத்தன்மையான பதார்த்தங்களைக் குறைத்து அவற்றை உண்பதற்குப் பாதுகாப்பானதாக ஆக்குவதற்கு தாவர இனவிருத்தி பயனுள்ளதாகும். சில தாவர உற்பத்திகளை கூடியளவு சமிபாடடையக் கூடியதாக மாற்றுவதற்கும் தாவர இனவிருத்தி பயனுள்ளதாகும். உதாரணமாக ஒரு தாவரப்பொருளின் உயர் இலிக்னின் உள்ளடக்கம் விலங்கு உணவாக அது பயன்படும் பெறுமானத்தைக் குறைக்கிறது இனவிருத்தித் தொழில்நுட்பங்களின் பயன்பாட் டினால் இது தீர்க்கப்படலாம்.

வளர்ந்து வரும் ஒரு உலக சனத்தொகையின் உணவு விநியோகத் தேவைகளுக்கு முகங்கொடுத்தல்.
அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள் உலக சனத்தொகைக்கு ஓர் மேலதிக மூன்று பில்லியன் மக்கள் சேர்க்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சனத்தொகைப் பெருகக்த்துடன் இணைந்ததாக, விநியோகத்தில் ஓர் விரிவாக்கம் தேவைப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாக விவசாயத்துக்கான நிலம் குறைவாகவே உள்ளது. எனவே குறைந்தளவான நிலத்தில் கூடியளவான உணவு உற்பத்திபண்ணப்படவேண்டியுள்ளது. இது, விருத்திசெய்யப்படுவதற்கென மேம்படுத்தப்பட்டதும் உயர் விளைச்சலைத் தரக்கூடியதுமான விலங்கு மற்றும் தாவரப் பேதங்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இதற்குத் துலங்கலாக, சாதாரண அரிசியைப் பார்க்கிலும் 50% கூடுதலான விளைச்சலைத் தரும் சுப்பர் அரிசியையும், சாதாரண கோதுமையைப் பார்க்கிலும் 20-40% விளைச்சலைப் பருக்கும் சுப்பர் கோதுமையையும், உயர் விளைச்சலைத் தரும் பல்வேறு Corn மற்றும் சோளத்தாவர பேதங்களையும் தாவர இனவிருத்தி உற்பத்திபண்ணியுள்ளது. பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தேர்வுக்குரிய இனவிருத்தி நுட்பமுறைகளின் கவனம் மிகுந்த பயன்பாட்டினால் இறைச்சி மற்றும் பால் ஆகியவற்றின் மொத்த உற்பத்தியும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

சூழல் அழுத்தங்களுக்கு இசைவாக்கமடைய வேண்டிய தேவை.
வானிலையும் மண் நிபந்தனைகளும் பயிர் விளைச்சலில் ஒரு பிரதான தாக்கத்தைக் கொண்டிருக்கலாம். காலநிலை மாற்றங்களும் புவிக்கோள வெப்பமடைதலும் பயிர் உற்பத்திச் சூழலுக்குப் பகுதியாகக் காரணமாகும். (உ.ம். புவியின் சில பிரதேசங்கள் உலர்ந்து கொண்டும் சில பிரதேசங்கள் உவர்த்தன்மையடைந்து கொண்டும் இருக்கின்றன) உணவின் அதிகரித்த தேவையை எதிர்கொள்ளுவதற்கு இடர்பாடுடைய நிலைமைகளுக்கு நிலைபேறுடையக் கூடிய புதிய பயிரினங்கள் விருத்திசெய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. உதாரணமாக, உற்பத்திச் சூழலில் பல்வேறு உயிருக்குரிய அழுத்தங்களையும் (நோய்கள் மற்றும் பூச்சி, பீடைகள்) உயிரற்ற அழுத்தங்களையும் (உ.ம். உவர்த்தன்மை, உலர்வு, வெப்பம், குளிர்) தாங்கக்கூடிய புதிய வகைகளை விருத்தி செய்யவேண்டியது அவசியமாகும். துலங்கலாக, பிறப்புரிமையமைப்புக்குரிய முறையில் மாற்றியமைக்கப்பட்ட Bt தொட்சிஜனைக் காவும் பீடை எதிர்ப்புத்திறனுள்ள பருத்தி, சோளம் மற்றும் உருளைக்கிழங்குகளும், உவர்த்தன்மையைச் சகித்து வாழும் நெல் பேதங்கள், குளிரைச் சகித்து வாழும் புகையிலை உருளைக்கிழங்கு மற்றும் strawberry பேதங்களும் விவசாயத்தைத்தொழிற்றுறையில் இப்பொழுது கிடைக்கக்கூடியனவாக உள்ளன. இதுபோன்றே நோயாக்கிகளுக்கு எதிரான அதிகரித்த தடைச்சக்தி கொண்ட பயிர்த்தாவரங்களும் பண்ணை விலங்குகளும் (கால்நடைகள், பன்றிகள், செம்மறியாடுகள், ஆடுகள் முதலியன) பல்வேறு இனவிருத்தி நுட்பங்களினூடாக உற்பத்திபண்ணப்பட்டுள்ளன.

பக்க அனுசரணை



தொடர்ச்சி...

# இந்து கலாசார...

தமிழ் பேசும் கலைஞர் சங்கமும் கலைஞர் உரையாடலும் மண்டபத்திற்கு வெளியே நடந்தேறியமையை ஊடகங்களும் பெரிதுபடுத்தியிருந்தன.

முகமறியாத பல தமிழ்க் கலைஞர்கள் அங்கு கூடினர், முகம் பார்த்தனர், அறிமுகமாகினர், உரையாடினர், சிந்தை மகிழ்ந்தனர்.அவற்றை ஊடகங்கள் பெரிதுபடுத்தின, இது மகிழ்ச்சியளித்தது

விருதுக்கான சிங்களக் கலைஞர் தெரிவு பற்றி சிங்கள கலைஞர் அறிஞர் மத்தியில் அதிருப்தியுண்டு. இங்கும் அவை இருந்தன என்பதைப் பின்னாளில் வந்த முகநூல் குறிப்புகள் காட்டின. காட்டிக்கொண்டிருக்கின்றன. சுட்டிக்காட்டப்படும் சரியான தவறுகள் யாவும் திருத்தப்பட வேண்டியவை, எனினும் இச்செயலை முன்னெடுத்த, அடுத்த வருடத்திலிருந்து இவ்விருது விழா வருடம் தோறும் தான் இல்லாவிடினும் நடைபெறவேண்டும், அர்ப்பணிப்போடு செயற்படும் அனைத்துக் கலைஞர்களுக்கும் பாராட்டும் விருதும் வழங்கப்படவேண்டும் எனக் கூறி அதற்கான பலமான அடித்தளத்தையும் இட்ட அமைச்சர் மனோ கணேசனை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்.இந்து கலாசாரத் திணைக்களம் வழக்கமாக நடத்தும் சமய விழாக்களில் வழக்கமாகக் காணப்படும் முகங்களைவிட பல புதுமுகங்கள் காணப்பட்டமையும் புது ஆற்றுகைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடக்கூடிய விடயங்களாகும்.

ஓடி ஓடி ஒழுங்குகளை மேற்கொண்ட திணைக்கள ஊழியர்களையும் அவர்களை வழி நடத்திய பணிப்பாளர் உமா மஹேஸ்வரனையும் பாராட்டுவோம்.

ஈழத்துச் சினிமா, ஈழத்துச் சினிமா இசை, ஈழத்தின் பரத நடனம் என்பன முக்கியமே, ஆனால்,இவற்றிற்கு மேடையில் கொடுக்கப்பட்ட இடம்போல ஈழத்து நடனம், ஈழத்துக் கூத்து, ஈழத்து நாடகம், ஈழத்து நாட்டார் இசை, ஈழத்து கிராமிய ஆற்றுகைகள் என்பனவும் மேடையில் இடம்பெற்றிருப்பின் விழா மேலும் அர்த்தம் பெற்றிருக்கும். அடுத்த தடவை இவை கவனத்தில் எடுக்கப்படின் மகிழ்ச்சி. விருது பெற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

தொடர்ச்சி...

# "தோட்டக்கா...

எங்கள் தலைமுறை மாற எடுத்த காலத்தை எடுக்க உங்களுக்கு அவகாசமில்லை. நீங்கள் இப்போதே மாறியாக வேண்டும். உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. நாம் இளக்காரமாக நினைத்தவர்கள் தமது உழைப்பாலும், உறுதியாலும் உயர்ந்திருக்கிறார்கள். நாம் மாத்திரம் அப்படியே இருக்க முடியாது. முதலில் மற்றவர்களை மதிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் பள்ளிக்கூடங்களுக்கு அதிக பங்கிருக்கிறது. சக வாழ்வு, சக இனங்களுடனான உறவு என்பவற்றை பள்ளிக்கூடங்கள் கற்றுத்தர வேண்டும். அதற்கு ஆசிரியர்களும் மாற வேண்டும். வேறுபாடுகளுக்குள் ஒரு ஒருமைப்பாட்டைக் காண விளைய வேண்டும். முதலில் நமது தவறுகளை ஒப்புக்கொள்ள முயல்வோம். அதற்கான மன்னிப்புக்கோருவோம். எமக்காக உயிர் கொடுத்து உழைத்த ஒரு சமூகத்துக்கு தலை வணங்குவோம். இதனால், நாம் வீழ்ந்துவிடமாட்டோம். உயர்வோம்.

தொடர்ச்சி...

# இமாலய சாதனை...

பல்லாயிர வருசங்களுக்கு முந்திய சித்திரங்களை கவனித்தால் அவற்றிலுள்ள பெண்ணுருவங்களெல்லாம் மை தீட்டிய கண்களையுடையனவாய் காட்சியளிப்பதைக் காணலாம்.

நாம் பிறந்த பொன்னாட்டில் பேரோடும்புகழோடும் வாழ்ந்த பரம்பரையினரை நாமறிய அவாவுற வேண்டும். பேரும் புகழும் பெருவாழ்வும் வாழ்ந்த மக்கள் இன்று ஈனர்களாய் இழிகுலத்தோராய் வாழ்கின்றனர். ஒன்றாகப்பிணைந்து ஓர் குலமாய், ஓரினமாய் வாழ்ந்த மக்கள் இன்று பல மொழி பேசுவோராகப் பல மதங்களை அனுஸ்டிப்பவராக மாறி ஒருவரை ஒருவர் எதிர்த்து மாளும் அளவுக்கு வந்திருக்கிறோம். ஆரம்பத்தில் கூறிய குமரிக்கண்டமென்னும் தமிழகம், இலங்கைத்தமிழகம், போர்னியோ, சுமத்ரா, யாவா, அவுஸ்ரேலியா ஆகிய தீவுகளாக மாறிவிட்டன. பெயர் மாறி பெரும் நிலப்பரப்பு சிதறியபோதிலும் மண்ணுக்குள்ள ஒற்றுமை அங்கு வாழும் பூர்வீக குடிகளுக்கும் நமக்குமுள்ள ஒற்றுமையும் தொடர்பும் காடுகளில் வாழும் மிருகங்களுக்குள்ள தொடர்பும் மிக மிக நெருக்கமானவை. அலைபாயும் அகன்ற கடலாலும் விண்ணளாவிய மலைத்தொடர்களினாலும் அவ்வேற்றுமையைக் கூறு செய்துவிட முடியாது. தொடர்பான சரித்திரம் தொகுத்து வைக்காத காரணத்தினால் தமிழன் வாழ்வில் ஒளியையும், இருளையும் உணரமுடியாத காலமொன் றிருந்தது. இவ்வுலக நல்வாழ்வுக்காக சிந்தனை, செயல் ஆகியவற்றைச் செலவிட்ட இடைக்காலத்தில் அவன் கண்காணாத ஒரு உலகில் கவனம் செலுத்தத் தலைப்பட்டான்.

ஓட்டைக் குடிசையில் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு மறு உலகில் மாடமாளிகை எழுப்பி மகிழ்ந்து வாழ எனக்கொரு டிக்கெட் பெற்றுத்தாருங்களென வேற்றாரிடம் மன்றாடி சிபார்சு பெற "கியூ" வரிசையில் தவங்கிடந்தான்.

காட்டரணும், கடலரனும், மலையரனும், கட்டிய மதகஜத்தைப்போல் வீரவாழ்வு வாழ்ந்த தமிழன் மனஅரணும், மதியரணும் கட்டத் தவறியதால் பாதாளத்தில் அள்ளியெறியப்பட்டான். என்பதுதான் தமிழன் வீழ்ச்சி வரலாறு. நான் சொல்வது அனைத்தும் உண்மைதான். நாங்கள் என்ன செய்வது பெண்கள். மேலும் மாணவிகள் என்று நீங்கள் நினைக்கலாம். (தொடரும்)

தொடர்ச்சி...

# ஜனாதிபதி...

தடை செய்யப்பட்ட அமைப்பாக இலங்கையரசால் பிரகடனம் செய்யப்படுகிறது.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தனா அரசு ஜேவிபியை அடக்கியொடுக்கிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக செயற்பட வேண்டுமென்கின்ற இரகசிய ஒப்பந்தத்தோடு ஆயுள் காலச் சிறைத்தண்டனை பெற்றிருந்த ரோகண விஜயவீரா உட்பட்ட அனைத்து கைதிகளையும் விடுதலை செய்து அவர்கள் மீதான தடையையும் நீக்கியது. வெளியே வந்த அவர்கள் ஜனநாயக பாதையில் பயணித்தனர். 1982ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரோகண விஜயவீரா போட்டியிட்டார். அதில் அவர் 2,75,000வாக்குகளை(சுமார் 4 வீதமான) பெற்றார். தனது வெற்றியை மீள உறுதி செய்துகொண்ட ஜெயவர்த்தனா 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற யூலை கலவரத்துக்கு காரணமானவர்கள் இந்த ஜேவிபியினரே என்கின்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி மீண்டும் ஜேவிபியைத் தடை செய்து அரசியலில் இருந்து ஓரங்கட்டினார். ஆனால் ஜேவிபியினர் மீதான யூஎன்பியின் இந்த குற்றச்சாட்டுக்களை 'பொய்யானவை' என்றும் அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களுக்கோ முஸ்லீம் மக்களுக்கோ எதிரான 'வகுப்புவாத கலவரங்களில் ஈடுபடவில்லை' என்றும் இலங்கையில் மூத்த அரசியல் தலைவரான என்.சண்முகதாசன் மற்றும் மாக்சிச ஆய்வாளர் குமாரி ஜெயவர்த்தன போன்றோர் சான்று பகிர்ந்துள்ளனர்.

அதன்பின்னர் இந்த ஜேவிபியின் தலைமறைவாக இயங்கத்தொடங்கினர். 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மீண்டும் ஒரு கிளர்ச்சிக்கான செயற்பாடுகளில் ஜேவிபி இறங்கியது.

இவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மிக கடுமையாக எதிர்த்த இவர்கள் இந்திய இராணுவத்தின் வருகையை ஒரு மேலாதிக்க தலையீடாக தென்னிலங்கையில் பிரச்சாரம் செய்தனர்.

வரலாற்றுக்காலம் தொட்டு இலங்கையை ஆக்கிரமிப்பதும் அழித்தொழிப்பதுமாக இந்தியா செலுத்தி வரும் ஆதிக்கத்தை நினைவுறுத்தி சிங்கள மக்களின் உணர்ச்சிகளை தூண்டி விடுவதில் வெற்றிகண்டனர்.

பிரேமதாசா போன்றவர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எப்படி எதிர்த்தனரோ அதற்கும் மேலாக ஜேவிபியினரும் இந்தியாவின் தலையீட்டை எதிர்த்தனர். இந்திய மேலாதிக்கத்துக்கும் இலங்கையின் தேசியவாதத்துக்கும் இடையில் பலிக்கடாக்களாக இலங்கை தமிழரின் உரிமை பிரச்சனை சிக்குண்டு போவதற்குஜேவிபியினரின் இந்த கண்மூடித்தனமான இந்திய எதிர்ப்புவாதம் வழிகோலியது.

இந்திய வம்சாவளியினரான கொழும்பு தமிழர்களும் மலையக தமிழர்களும் கொண்டிருக்கின்ற இந்திய மாதிரிகளைக்கொண்ட அமைப்புக்கள்,கலாசார சங்கங்கள் ,இந்திய தலைவர்களுடனான தொடர்புகள் அனைத்தையும் எதிர்த்த ஜேவிபியினர் வடக்கு, கிழக்கு தமிழர்களின் சமூக கலாச்சார அரசியல் செயற்பாடுகள் அனைத்துமே இந்திய தொடர்புகளுடனானவை என்கின்ற பிழையான சூத்திரத்தை கொண்டே தமிழர்களின் உரிமை பிரச்னையை பார்த்தனர்.

இதன்காரணமாகவே இலங்கை தமிழரின் பிரச்சனைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையையும் எதிர்ப்பதில் தீவிரம் காட்டினர்.

தென்னிலங்கையிலும் கொழும்பிலும்கூட மாகாணசபை தேர்தல்களில் போட்டியிட்ட பலர், ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய தலைவர்கள்,போலீசார் என்று பலநூறுபேர் 1987-1989ஆம் ஆண்டு காலத்தில் ஜேவிபியினரால் கொல்லப்பட்டனர்.

அதுமட்டுமன்றி பல இடதுசாரி தலைவர்கள் கூட பழிவாங்கல்களுக்கு ஆளாகினர்.

(அடுத்தவாரம் தொடரும்)

தொடர்ச்சி...

# ரணில் - சஜித்....

விக்கிரமசிங்க தான் போட்டியிடவுள்ளதாக கடந்தவாரம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் கூறியிருந்தார்.

ஆனால் தான் போட்டியிடவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறவில்லையெனவும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் தமது முகநூல் பதிவுகளில் வாதிட்டிருந்தனர். எனினும் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிட விரும்புவதாக கட்சித் தகவல்கள் உறுதியாகக் கூறுகின்றன.

ஆனாலும் ரணில் - சஜித் பிரேமதாச ஆகியோர் செவ்வாய்க்கிழமை இரவு சந்தித்துப் பேசிய பின்னர் முடிவுகள் சாதகமாக அமையலாமென கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. குறிப்பாகப் பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அடுத்த சில நாட்களில் உரிய பதில் கிடைக்கும் என்றும் சஜித் பிரேமதாச புதன்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். எனினும் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச அறிவிக்கப்படும் வாய்ப்புகள் இல்லையென்றே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தரப்புக் கூறுகின்றது.

சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தவே ரணில் சஜித்துடன் இந்தச் சந்திப்பை நடத்தியிருந்தாரென்றும் ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகம் விரைவில் வெளிவரும் எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாசவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரருமான பிரபல வர்த்தகர் டட்லி சிறிசேனவும் கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள ஜய் ஹில்டன் ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை முற்பகல் பதினொரு மணிக்குச் சந்தித்து நீண்டநேரம் உரையாடியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை அன்று இரவு சந்திப்பதற்கு முன்னதாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. டட்லி சிறிசேனவுடனான சந்திப்பிற்காக இரண்டாம் பிரிவினரும் கலந்துகொண்டதோடு அமைச்சர் சஜித் பிரேமதாச, டட்லி சிறிசேன ஆகிய இருவரும் இந்த இரண்டாம் தரப்பிரிவினருடன் நீண்ட நேரமாகக் கலந்துரையாடலை நடத்தியிருக்கின்றனர். ஆனால் ஆழமாகப் பேசப்பட்ட விடயங்கள் குறித்து இதுவரை தகவல் கிடைக்கவில்லை.

டட்லி சிறிசேன தற்போது ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்து வருகின்றார். அதேவேளை, டட்லி சிறிசேனவுக்காக கோட்டாபய ராஜபக்ச விசேட இராப்போசன விருந்தொன்றையும் அவருடைய இல்லத்தில் வழங்கியிருந்த நிலையில் செவ்வாய்க்கிழமை சஜித் பிரேமதாசவையும் சந்தித்து நீண்ட நேரம் பேசியுள்ளமை எதற்காக? எந்த அடிப்படையில்?

# அக்கினி புலையவெளி
# உணவு உற்பத்திப் பொருட்கள்
## சைவ முறையில் தயாரிக்கப்பட்டது

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

## தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 196,Trinco Road, Batticaloa